**தேசிய லொத்தர் சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய லொத்தர் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான ''சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு முறைமையொன்று சங்கத்தினால் பேணப்படல் அவசியமானது ஆகும். பொதுப் பேரேடு, நாளேடுகள், நாளேட்டுக் குறிப்புகள், பொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் போன்ற பிரதான கணக்கீட்டுக் குறிப்புகளை பேணுவதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான நியமத்துடன்னான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 91 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயப் பெறுமதிக்கு அளவிடுதல் தொடர்பில் சபையின் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன். | நிதி அறிக்கையிடல் நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நியம இலக்கம் 01** | | |
| (i) நியமத்தின் 69 ஆம் பந்திக்கு முரணாக முன்னைய வருடங்களில் நடைமுறை பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 51,734,747 தொகையானது மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறை சபையினால் முன்னைய வருடங்களிலிருந்து தொடர்ச்சியாக பின்பற்றப்படுகின்றது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினங்களை உரிய முறையில் இனங்காணுவதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதி அறிக்கையிடல் நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ii) சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 39,177,041 ஆன இடர் கடன் தொகையை நியமத்தின் 60 மற்றும் 66 ஆம் பந்திகளுக்கு இணங்க தீர்ப்பனவு செய்யும் காலப்பகுதிக்கமைய நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது என வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது இடர் கடன் தொகையை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது என வகைப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| **(ஆ) நியம இலக்கம் 07** | | |
| (i) வெகுமதி ஒதுக்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 233,574,416 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் | வெகுமதி ஒதுக்கின் நிதி விலகலடைதல் இடம்பெறாத போதிலும், அதன் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | போது வரிக்கு முந்தைய இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் செயற்பாட்டு பணிகளிலிருந்து உருவாகியகாசுப்பாய்ச்சல் அந்த பெறுமதியினால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | விலகலினை காண்பிக்க வேண்டும். அவ்வாறல்லாது போது காசுப் பாய்ச்சல் கூற்றில் சமப்படுத்தலை காண முடியாது. | |
| (ii) | காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்படு மூலதன மாற்றங்களாக இருப்புக்களின் அதிகரிப்பு ரூபா 1,099,590 குறைவாகவும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் குறைவானது அந்த பெறுமதியினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது இவ்வாறான விலகல்கள் இடம்பெறாவிடின் இருப்புக்களின் சீராக்கம் செய்வதற்கு குறித்து கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | **நியம இலக்கம் 08**<br>---------------------------------<br>சபையினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைக் குறிப்பு இலக்கம் 2.1.8 இன் பிரகாரம் வருமானம் மற்றும் அதற்குரிய கிரயம் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபை கொள்வனவு செய்திருந்த லொத்தர் சீட்டுக்களுக்கு வெகுமதி பெறுமதி குறித்த கிரயத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் எதிர்காலத்தில் இடம்பெற்றால் வருமானம் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக கணக்கு வைப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| (ஈ) | **நியம இலக்கம் 12**<br>-----------------------------------<br>சபையினால் கடந்த வருடங்களுக்கு உரியதாக வழுக்களை திருத்துவதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த கைவிடப்பட்ட இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,099,590 தொகையும் கடந்த வருடத்தில் கணக்கு வைக்கப்படாத செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 3,912,369 தொகையும் கடந்த வருடத்தில் குறைபெறுமானத்தேய்வு ஒதுக்கீடு ரூபா 3,967 ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வருமான வரித் தொகையான ரூபா 788,696 | கடந்த வருடத்தின் வருமான வரி கணிப்பீட்டிற்குரிய திருத்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் சீராக்கம் செய்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தொகை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 62A பந்திக்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் வரி செலவித்தில் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. இந்த முன்னோக்கிய சீராக்கம் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 மற்றும் 08 இன் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

(உ) **நியம இலக்கம் 16**

-------------------------------

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 350,153,304 பெறுமதியான விளைவற்ற சொத்துக்கள் மற்றும் பெறுமதி முழுமையாக பதிவழிக்கப்பட்டுள்ள தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதி 79 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் வெளிப்படுத்துவதாக குறித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |

(ஊ) **நியம இலக்கம் 19**

---------------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான சபையினால் ஊழிய பணிக்கொடைகளாக ரூபா 61,842,602 தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு பொருத்தமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நியமத்தின் 135 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நட்டத்தினை இனங்காணுதல் தொடர்பில் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | சபையினால் 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 53,000,000 தொகையும் மேலதிக பணமாக 2020 ஆம் வருடத்தில் அந்த வைப்புக்களுக்கு சேர்க்கப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஆயுட்கால நட்டத்தினை இனங்காணுதல் தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

(எ) **நியம இலக்கம் 24**

---------------------------------

| | | |
|---|---|---|
| நியமத்தின் 17 ஆம் பந்தியில் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் முகாமைத்துவ மற்றும் ஊழிய நலன் பிரிவுகளில் தனித்தனியாக | 2020 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்துவதாக குறித்துக் கொள்கின்றேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை<br>• குறுங்கால ஊழியர் நலன்கள்<br>• வழங்களின் பின்னரான சேவை நலன்கள்<br>• ஏனைய நீண்டகால நலன்கள்<br>• சமூக நலன்கள் | | |
| (ஏ) | **நியம இலக்கம் 36** | | |
| | நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் அழிவு நட்டம் தொடர்பில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது சொத்துக்களின் மீள் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதில் கிடைக்கும் பெறுமதிகளின் அடிப்படையில் சொத்துக்களுக்கு அழிவு நட்டம் தொடர்பில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கையை விட பரிசுகளுக்காக ஒதுக்கீட்டுக்களின் சேமிப்புக்களாகக் காணப்பட்ட ரூபா 233,574,416 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பரிசுகளுக்காக ஒதுக்கப்பட்ட போதிலும், எஞ்சியுள்ள பரிசுகளுக்காக ஒதுக்கீடுகள் 06 மாதங்களை கடந்த பின்னர் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்படும். எனவே, அந்த வெகுமதிப்பெறுமதி செலவினமொன்றாகின் றமையால் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியான கணக்கீட்டு முறைமை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,336,575 | 2002 யூன் 12 ஆந் திகதி பிரமுக்க வங்கி கலைக்கப்பட்டதன்அடி | உரிய அங்கீகாரத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 2008 ஏப்ரல் 23 ஆந் திகதிய 1546/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது அந்த தொகை முதலீடுகளின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ப்படையில் 2008.04.23 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இலங்கை சேமிப்பு வங்கியில் உரிமையாண்மை மூலதனத்திற்கு (Equity) மாற்றப்பட்டுள்ளது. அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த தொகை பதிவழிப்பதற்குரிய பரிந்துரையை வழங்குமாறு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் அதற்கு இதுவரை பதிலொன்று கிடைத்திருக்கவில்லை | கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளல். |
| (இ) | ரூபா 3,983,844 தொகையான சபையின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றிலான பொறுப்புக்களிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் எதிர் காலத்தில் நிதிக் கூற்றுக்களின் சொத்துக்களின் கீழ் சமர்ப்பிப்பதற்குகுறித்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | நடப்பாண்டின் போது பிற்போடப்பட்ட வரி கணிப்பீட்டின் போது 2015 ஆம் ஆண்டிற்காக சுவீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்களுக்கு வரி பதிவழிக்கப்பட்டுள்ள பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் பூச்சியமாக ஆக வேண்டியிருந்த போதிலும், அந்த பெறுமதி தவறுதலாக ரூபா 2,106,732 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் நடப்பாண்டில் பிற்போடப்பட்ட வரி ஒதுக்கீடு ரூபா 589,884 இனால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிற்போடப்பட்ட வரி பெறுமதியினை அடைப்புக்குறிக்குள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீதியினை சரியாக கணிப்பிட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளது. | கணக்கீட்டு மற்றும் வரி தத்துவங்களின் பிரகாரம் செயற்படல். |
| (உ) | 2017 ஆம் ஆண்டின் போது வருமான வரிக் கணிப்பீட்டில் கழித்தல்களின் கீழ் எடுக்கப்படாத ரூபா 1,355,557 ஆன அழிவு | 2017 ஆம் ஆண்டின் செலவினங்களுக்குரிய வருமான வரி கணிப்பிடப்பட்டு | கணக்கீடு மற்றும் வரி தத்துவங்களின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | நட்டம் மற்றும் சபையின் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 16,325,700 ஆன தகுதியற்ற செலவினங்கள் கழித்தல்களாக கருதி வருமான வரி செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த தவறுகளை திருத்தி அதற்காக செலுத்த வேண்டிய வரித் தொகையை கணக்காய்வுத் திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் லொத்தர் சீட்டுக்களை பகிர்ந்தளிக்கும் முகவர்களினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படாத 176,313 லொத்தர் சீட்டுக்களாக தண்டப்பணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,526,260 தொகை கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது. | மாவட்ட விற்பனை முகவர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒரு தடவை செலுத்தப்படும் 0.05 ஆன தரகுப் பணத்தில் ஒரு லொத்தர் சீட்டுக்காக ரூபா 16.50 தொகை மற்றும் 0.05 சதம் தண்டப்பணமாக அறவிடப்பட்டு கணக்கு வைக்கப்படும். | முகவர்களால் மீள அனுப்பப்படும் லொத்தர் சீட்டுக்களை உடனடியாக வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | 2019 மே 13 மற்றும் 14 ஆந் திகதிகளில் வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற ஊரடங்கு சட்டம் காரணமாக முகவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 307971 லொத்தர் சீட்டுக்கள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், ஆவணங்களை பேணுவதில் நிலவிய குறைபாடு காரணமாக 7431 லொத்தர் சீட்டுக்களுக்காக ரூபா 148,740 ஆன கிரயமும் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களுக்காக பின்னர் நடாத்தப்பட்ட சீட்டுழுப்புக்களாக முகவர்களுக்கு லொத்தர் சீட்டுக்களை வழங்கும் போது 13169 சீட்டுக்கள் கூடுதலாக வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் கிரயமான ரூபா 214,655 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் பொறுப்பேற்கப்பட்ட 300 494 லொத்தர் சீட்டுககளின் கிரயத்தினை கடன் பட்டோர் | சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 307931 ஆக இருந்ததுடன் முகவர்களுக்கு அதற்காக வழங்கிய மொத்த லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 321100 ஆகும். கூடுதலாக முகவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 13169 லொத்தர் சீட்டுக்களுக்குரிய அறவீடுகள் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் எதிர் காலத்தில் இடம்பெற்றால் கடன் பட்டோருக்குரிய சீராக்கங்களை மேற்கொண்டு | சரியாக கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கிற்கு செலவு வைக்காது அட்டுறு செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் கடன்பட்டோர் ரூபா 4,898,052 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அட்டுறு செலவினங்களும் அந்த அளவினால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிடமுடியாக்கடன் ஒதுக்கங்களின் பெறுமதியும் ரூபா 244,961 இனால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு வைப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் கடன் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த லொத்தர் விற்பனை கூடாரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,739,226 தொகையில் விற்பனை பிரதிநிதிகள் 91 பேரிடமிருந்து கிடைத்திருந்த காலுறைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய ரூபா 91,700 தொகையுமாக ரூபா 4,830,926 தொகையான தவணைப்பணம் அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் வருடத்திற்கு ரூபா 395,558.00 தொகையும், 2014 ஆம் ஆண்டிற்கு ரூபா 443,390.00 தொகையும் 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 729,690.00 தொகையும், 2019 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 1,449,000.00 தொகையும் பதிவழிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்கு உரியதாக கழிப்பதற்கு 2018 யூன் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப் பட்ட மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கினை பூர்த்தி செய்யும் விற்பனை முகவர்களுக்கு அனைத்து லொத்தர் சீட்டுக்களுக்காகவும் 25 சதம் வழங்குதல் இடம்பெற்றுள்ளது. ரூபா 1,600,000 தொகை 2020 ஆம் ஆண்டிற்குரியதாக பதிவழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தவணைப் பணத்தினை அறவிடுதல் மற்றும் உரிய அங்கீகாரத்தின் பிரகாரம் சீராக்கங்களை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது விற்பனை முகவர்கள் 20 பேருக்கு கடனுக்கு விற்பனை செய்த ரூபா 12,799,984 தொகையான உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக அறவிட வேண்டிய பணம் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பற்ற முறையயில் நிறுவனத்தின் கடன் கொள்கையின் பிரகாரம் கடனுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2016.12.31 ஆந்திகதியில் உள்ளபடியாக ரூபா 718 மில்லியனான லொத்தர் சீட்டுக்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டமையால் அறவிடப்பட வேண்டியதாக இருந்த 381 மில்லியன் கடன் தொகையில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டி இருந்ததாக இருந்த தொகை 12.69 மில்லியன் தொகை ஆகும். காசாக வழங்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களை மீள பெற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் கழிக்கப்பட வேண்டிய ரூபா 3.1 மில்லியன் தொகை சீராக்கப்பட்டதன் பின்னர் அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 9.59 மில்லியன் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ளது. மேலதிக நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன். | காப்பீட்டு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2007 ஆம் ஆண்டின் போது சபையின் ஊழியர்கள் இருவருக்கு ரூபா 1,003,038 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் கடனுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த தொகை | 2007 ஆம் ஆண்டில் காலி உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் | உரிய நடவடிக்கைகளின் பிரகாரம் செயற்பட்டு கடன் தொகைகளினை அறவிடுதல். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. தற்போது ஒரு உத்தியோகத்தர் சுழற்சி சேவையில் இல்லாதிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,000,000 ஆன தொகையினை தேசிய லொத்தர் சபைக்கு செலுத்தப்பட்டதுடன் டபிள்யூ. உயன்கொட எனும் நபர்குறித்த தீர்ப்பிற்கு இணங்க வில்லையென பின்னர் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார். அவ்வாறு இணங்காத காரணத்தினால் டபிள்யூ.உயன்கொட அவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 273,559,415 கூட்டுத்தொகையான வியாபார கடன்பட்டோர் மீதியினுள் கொழும்பு எயார்போட் சுப்பர் ட்ரோ லொத்தர் சீட்டுக்காக ரூபா 4,662,778 தொகையும் விற்பனை முகவர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 19,508,730 தொகையும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் விற்பனை முகவர் மீதிகளினுள் காலமடைந்த விற்பனை முகர்வகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 559,300 தொகை ஆகும். இந்த பெறுமதி தொடர்பில் உரிய சீராக்கம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | விற்பனை முகவர்கள் இருவரும் தற்போது உயிரோடு இல்லாத காரணத்தினால் ரூபா 559,300 ஆன தொகையை அறவிடுவதற்கு முடியாதுள்ளது. அந்த கடன் தொகையை பதிவழிப்பதற்காக 2018/05/15 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக 2018/08/03 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சபையின் நலன்புரி சங்கத்திற்கு கடனாக வழங்கப்பட்ட ரூபா லொத்தர் சீட்டுக்களுக்காக பெற வேண்டிய தொகை ரூபா 2,559,121 ஆகும். சங்கம் பெற்றுக்கொண்ட அந்த லொத்தர் சீட்டுகளில் நிறுவனத்தின் வலய முகாமையாளர்கள் 03 பேருக்கும் 04 உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 1,500,608 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்கள் | திரு.பிமல் குரே அவர்கள் ரூபா 219,265.94 தொகையினை அவரது ஓய்வூதியத்திலிருந்து வழங்குவதற்கும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு கடனை தீர்ப்பதற்கு செய்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளதுடன் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தன. இந்த மீதிகள் தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு முகவரிடமிருந்து பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்தம் அறவிடப்பட்டவாறு உள்ளது. வலய முகாமையாளர் லொத்தர் சீட்டுக்களை வழங்கிய முகவர்களிடமிருந்து அறவிடுவதற்காக வலய முகாமையாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அறிவிக்காது சேவையை கைவிட்டுச் சென்றுள்ள நபர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ஏனைய கடன் மீதிகளினுள் 9 வருடங்கள் பழமையான ரூபா 1,317,614 தொகையான கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அதனுள் செயலற்ற விற்பனை முகவர்கள் 70 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,758,935 மற்றும் பெறவேண்டிய ரூபா 722,731 தொகையாக இருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறாத மீதிகளாக குறிப்பிடப்படும் ரூபா 2,758,935 ஆன செலவு மீதியினுள் இனங்காணப்படாத கடன் மீதிகள் முகவர் தவிர முகவரின் கடன் மீதியில் முகவரின் கடன் மீதி தவிர எஞ்சிய பெறுமதிகளை கணக்குகளிலிருந்து கழித்த பின்னர் நானாவித கணக்கிற்கு செலவு வைப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நீர் மற்றும் எரிபொருள் விநியோகிப்பதற்காக 06 வருடங்களுக்கு முன்னர் நிறுவனமொன்றிற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 102,500 ஆன வைப்புக்களும் 2004 ஆம் ஆண்டின் போது 2006 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு 02 நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 160,000 பெறுமதியான பிணை வைப்புக்களும் குறித்த நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததுடன் அவற்றினை தீர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான அங்கீகாரத்திற்காக 2018.08.03 ஆந் திகதி மற்றும் 2019.08.27 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதனால் குறித்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | உரிய முறையில் தேடிப்பார்த்து மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |
| (ஏ) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரிருந்து முன்கொண்டுவரப்படும் இனங்காணப்படாத ரூபா 3,585,823 தொகையான செலவு மீதியொன்று 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 04 கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,979,245 தொகையும், பதவியணியின் 14 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 169,311 தொகையுமாக நிலவிய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,585,823 செலவு மீதி Accpac கணக்கீட்டு முறைமைக்கு புதிதாக அவசியமான தரவுகள் உள்ளடக்கப்பட்ட மையினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக இந்த மீதி உருவாகியுள்ளது. அந்த மீதியை அகற்றுவதற்காக 2018.08.03 ஆந் திகதி மற்றும் 2019.08.27 ஆந் திகதி ஆகிய தினங்களின் நிதி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள மையால் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | உரிய முறையில் தேடிப்பார்த்து மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |
| (ஐ) | 2003 ஆம் ஆண்டின் போது மரணமடைந்த மற்றும் பணி நீக்கத்திற்கு உட்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 240,983 தொகையான ஊக்குவிப்பு கொடுப்பனவு, 09 வருடங்களுக்கு முன்னர் மாவட்ட | செலுத்தப்படாத ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உரிய உத்தியோகத்தர்கள் இருவரும் பணி வறிதாக்கப்பட்டு நீதிமன்றத்தில் | உரிய முறையில் தேடிப்பார்த்து மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளின் கணனி தவணைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 256,952 தொகையான பணமும் கூடுதாக கிடைத்த கணனி தவணைகளை தீர்க்காமல் காணப்பட்டது. | வழக்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. மற்றைய பணம் தொடர்பில் 2019.08.27 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள மையினால் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | |
| (ஓ) | 2018 செப்தெம்பர் மாதத்தின் போது நடாத்தப்பட்ட கொவிசெத 1896 ஆவது விசேட 003 ஆம் சீட்டிழுப்பின் போது முகவர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 449,640 பெறுமதியான லொத்தர் சீட்டுக்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பணம் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன் தொகை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட வாறு உள்ளன. | உரிய முறையில் தேடிப்பார்த்து மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம். | | | |
| (i) | 14(2) மற்றும் 16(1) மற்றும் 16(4) பிரிவுகள் | சபையினால் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகாரசபைகளுக்காக | தேசிய லொத்தர் சபை ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் | அதிகாரச் சட்டத்தில் காண்பிக்கப் பட்டுள்ள படி |

லொத்தர் நடாத்தும் போது உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும் கொவிசெத, சுப்பிரிவாசன, ஜாதிக சம்பத, நீரோக மற்றும் செவன லொத்தர் சீட்டுக்களுக்காக குறித்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 06 மாதங்களைக் கடந்த உரித்து கோரப்படாத பரிசுகளின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் பரிசுகளுக்கு உரித்துக் கோரப்படாத ரூபா 389,032,360 ஆன வெகுமதி தொகைகள் மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. ரூபா 16,821,648 தொகையான உரித்துக் கோரப்படாத காசல்லாத பொருள் வெகுமதிகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2013 ஆம் ஆண்டின் போது பரிசு கையளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,350,000 தொகையான ஜீப் வண்டியொன்று மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,500,000 பெறுமதியான வான் வண்டியொன்றுக்காக வெற்றியாளர்கள் முன்வராத காரணத்தினால் அவற்றை சபையின் பாவனைக்கு ஈடுபட்டிருந்தது. அதற்காக ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதிகாரசபைகளுக்கு லொத்தர் சீட்டுழுப்புக்களை நடாத்தும் போது குறித்த நிறுவனங்களுடன்உடன் படிக்கை கைச்சாத்திடுவதற்கான காரணம் குறித்த பணம் நேரடியாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவால் ஆகும். உரித்துக் கோரப்படாத பணப் பரிசுகள் தொடர்பில் நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய கால எல்லையின் பின்னர் அந்தப் பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் லொத்தர் சீட்டின் ஆரம்பம் முதல் வழங்கப்படும் பொருள் வடிவிலான பரிசுகள் தொடர்பில் உரித்துக் கோரப்படாத சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய விதம் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. பரிசில்களின் தொகுதிகள் திரண்ட நிதியத்திற்கு நடைமுறைக்குப் பொருந்தும் விதத்தில் பங்களிப்புச் செய்வதற்கு முடியாமை காரணமாக அந்த பரிசில்கள் ஏனைய சீட்டிழுப்புக்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே, பல சந்தர்ப்பங்களிளல் பல சீட்டுழுப்புக்களில் விசேட பரிசில்களாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஜீப் வண்டியொன்று மற்றும் வான் வண்டியொன்று நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்

நடவடிக்கை எடுத்தல்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் நிறுவனத்தின் கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகன குழாமிற்கு சேர்க்கப்பட்டு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 17(2) பிரிவு | லொத்தர் வருமானத்தில் உரிய செலவினங்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கடந்த வருடங்களுக்கு உரியதாக அவ்வாறு செலவு வைக்கப்படாத ரூபா 1,601,530,457 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சபையின் கணக்கீட்டு நடவடிக்கைகள் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற மையால் நடப்பாண்டின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 605 மில்லியன் ஆன போதிலும், ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நடைமுறை சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிதி நிலைமையை கருத்தில் கொண்டதன் பின்னர் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட பணத்தினை அனுப்ப முடியும் என அறிவித்திருந்ததுடன் SITST Fund இல் காணப்பட்ட ரூபா 20 மில்லியன் பணத்தொகையை திறைசேரிக்கு தற்போது கிடைத்துள்ளது. கொவிட் 19 நிதியத்திற்கு ரூபா 25 மில்லியனான பங்களிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | 20(1)(2) பிரிவு | சபையினால் லொத்தர்களை நடாத்துதல் தொடர்பில் விதிகள் உருவாக்கப்பட்டு விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 | அனைத்து லொத்தர் சீட்டுக்களினதும் பரிசு வழங்கும் முறைமையினை மாற்றுதல் தொடர்பில் விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்காக | லொத்தர்களை நடாத்துவதற்கு உரிய விதிகளை உரிய முறையில் வர்த்தமானி மூலம் மக்களுக்கு அறிவித்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட மெகாபவர், நீரோக, சுப்பிரி திலக்சபதி, தன நிதானய, செவன மற்றும் தரு திரி சம்பத்த ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த லொத்தர் சீட்டுக்களின் ரூபா 6,013,524,440 ஆன விற்பனை வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. இந்த வருமானத்தில் ரூபா 2,919,790,331 ஆன பரிசில்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,164,693,868 தொகை விற்பனை முகவர்களுக்கு தரகுகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. அவ்வாறே, வியாபாரத்தின் தன்மையின் அடிப்படையில் பரிசில்கள் வழங்கும் முறைமையை மாற்றுவதற்காக குறுங்காலத்தில் அவ்வவ்போது இடம்பெற்ற காரணத்தினால் வர்த்தமானி மூலம் வெளியிடல் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்பதால் சபைக்குரிய அதிகாரச் சட்டத்தினை திருத்தும் போது குறித்த பிரிவினை திருத்துவதாக திருத்தி பிரிவொன்றினை உள்ளடக்குமாறு சட்ட வரையுனர் திணைக்களத்தினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 2(அ)(1)(ஏ) பிரிவு | மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரின் முன் எழுத்து மூல அங்கீகாரமொன்று இல்லாது உருமாற்றல் அல்லது வாகனமொன்றின் வடிவமைப்பினை ஏதாவது ஒரு விதத்தில் மாற்றியமைக்க முடியாத போதிலும், சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 20,750,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட சிங்கள் கப் வண்டிகள் 06 இன் உடல் பகுதி கப் வண்டியினைப் போலவும் வெளிப்புறம் விளங்கும் வகையில் 1,625,000 செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கெப் வண்டி சபையின் விற்பனைப் பணிகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதன் ஆசனங்களின் எண்ணிக்கை அல்லது ஏனைய இணைக்கப்பட்ட பகுதியின் பிரதான வேறுபாடொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பதனால் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. இந்த வாகனமொன்றின் முழுமையான உடல் பகுதி மாற்றத்திற்கு உள்ளாவதில்லை என்பது சுட்டிக் காண்பிக்கப்படுவதுடன் இதன் கனதி மேற்புறம் | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அகற்றப்பட்டு முன்னர் இருந்த நிலைமைக்கு மாற்றுவதற்கு இயலுமை உள்ளது என்பதனையும் சுட்டிக் காண்பிக்கின்றேன். எவ்வாறெனினும், அவ்வாறு தேவைப்படின் அது தொடர்பில் எதிர்காலத்தில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்கள்திற்கு காண்பித்து அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகளை மேற்கொள்கின்றேன் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| (i) | viii ஆம் அத்தியாயத்தின் 10.1 பந்தி மற்றும் 10.2 பந்தி | வார இறுதியில் மற்றும் அரச விடுமுறை தினங்களில் கடமைகளில் ஈடுபடுவதற்காக 08 மணித்தியாலங்களுக்கு குறையாத நாளொன்றுக்காக சம்பளத்தில் 1/20 ஆன படியொன்றினை வழங்க முடியுமாயினும் அந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்களை கடமை நிறைவேற்றும் ஒவ்வொரு நாளுக்கும் இரு தினங்களுக்கு கடமை மேற்கொண்டதாக கருதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் அவ்வாறு இரு தினங்களாக கருதிய 18 சந்தர்ப்பங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 70,405 ஆகும். மேலும் வாரத்தில் வேலை நாட்களுக்கும் அரச விடுமுறை நாட்களாக கருதி விடுமுறை படிகள் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் | 2002.09.26 ஆந் திகதிய 3579(10) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையில் காணப்படும் சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 84,738 ஆகும். | | |
| (ii) | xxiv ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு 2018 சனவரி 23 PE/LO/NLB/COPE/2018 ஆம் இலக்க அரச முயற்சிகள் திணைக்களத்தின் கடிதம் | 2005 சனவரி 01 ஆந் திகதி முதல் ஆதன கடன்களை வழங்குதல் வங்கிகளின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பில் அரச முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டின் போது ரூபா 18,215,909 ஆன தொகை ஆதன கடன்களாக சபையின் பணத்தினை உபயோகித்து செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஆதன கடன்களுக்காக ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய வட்டியினை கருத்திற் கொள்ளாது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் 4 சதவீதமான ஆகக்குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்தது. | 1995 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிரந்தர சேவையில் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் சேவையாற்றிய ஊழியர்களுக்கு வீட்டுக்கடன் வழங்குதல் இடம்பெறுகின்றது. வங்கியின் மூலம் வீடமைப்புக் கடன்களை பெற்றுக் கொள்ளும் போது ஊழியர்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்கின்ற அசௌகரியங்கள் காரணமாக மற்றும் நிறுவனத்தின் விளைதிறனுக்காக பங்களிக்கும் ஊழியர்களின் நலனினை ஏற்படுத்தும் நோக்கில் 4% ஆன வட்டியின் அடிப்படையில் வீட்டுக் கடன்களை வழங்குதல் இடம்பெறுகின்றது. இதன் மூலம் கிடைக்கும் 4% இற்கு மேலதிக வட்டி வருமானம் சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். | திறைசேரியின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | xxiv அத்தியாயம் | முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது சபையின் பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் / மேம்படுத்தல் பதவிக்காக நபரொருவர் இணைக்கப்பட்டு 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் இதுவரையிலும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டவாறு உள்ளது. | பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல் / மேம்படுத்தல்) பதவிக்காக ஆட்சேர்த்தல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அறிவுரை பெற்றுக் கொள்வதற்காக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்பட்டு உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 394 | சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3,400,584 பெறுமதியான 420 காசோலைகளுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்காது நிறுவனத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | விற்பனை முகவர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தும் போது அந்த கொடுப்பனவுகளுக்குரிய கணக்குகள் செயழிலந்தமை, கணக்கு இலக்கங்கள் தவறாக இருத்தல் போன்ற காரணங்களால் காசோலைகளை இரத்துச் செய்ய நேர்ந்திருந்தது. கடந்த காலப்பகுதியினுள் இந்த கொடுப்பனவு Slip Tranfer மூலம் இடம்பெறாமையினால் பெரும் எண்ணிக்கையிலான காசோலைகள் விநியோகிக்கப் பட்டுள்ளதுடன் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்பட்டது. தற்போது அந்த கொடுப்பனவு Slip Tranfer ஊடாக இடம்பெறுகின்றிமையினால் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான காசோலைகள் இரத்தாகின்றமையை காணக்கூடியதாக இருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்த மீதிகளை கணக்கு கூற்றுக்களில் சீராக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல், விளம்பரம் பொருட்கள் சேவைகளை விநியோகித்தல் தொடர்பான உடன்படிக்கைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில உடன்படிக்கைகளின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் லொத்தர் சீட்டுக்களின் அச்சடிப்பு, விளம்பரம் மற்றும் பொருள் மற்றும் சேவை வழங்கல் உடன்படிக்கைகளின் பிரதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | நிதிப்பிரமாணம் 754, 756, 757, 758 மற்றும் 770 | ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 754 இன் கீழ் களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரால் கணக்கு புத்தகங்களை சமப்படுத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரமாணம் 756 இன் கீழ் பொதுவாக சொத்துக்களின் மதிப்பாய்விற்கு மதிப்பாய்வுச் சபையொன்று நியமிக்கப்படுவதுடன் பயன்படுத்த முடியாத பொருட்களும் அந்த சபையினால் அடையாளம் காணப்படும். நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரால் சமப்படுத்தப்பட்ட பொருட் பதிவேடுகள் மதிப்பாய்வு சபையினால் பரீட்சிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது. அவ்வாறே நிதிப் பிரமாணம் 758 இன் பிரகாரம் களஞ்சியப் பிரிவினால் மாதாந்த இருப்பு மீதிகள் கணிப்பிடப்படுவதுடன் எதிர்காலத்தில் அதனை இரு மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிப்பதற்கு குறித்த பிரிவிற்கு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணம் 770 இன் கீழ் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் D எழுத்தினாலும் மறுசீரமைக்கப்பட்டு மீள பயன்படுத்தக் கூடிய பொருட்கள் ஆங்கில எழுத்து R இனாலும் அடையாளப்படுத்தப்பட்டு மதிப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை மேலும் திருத்தமான மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (உ) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் 01 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | (i) | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான உரித்துடைய 04 உத்தியோகத்தர் களுக்காக மாதாந்தம் வழங்ககூடிய எரிபொருள் படிகளின் எல்லையினை விஞ்சி ரூபா 1,812,130 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் அந்த எரிபொருள் படி தற்போது சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்பட்டுள்ளது. | நிதி அமைச்சின் அங்கீகாரம் எழுத்துமூலம் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| | | (ii) | உத்தியோகபூர்வ வாகன உரித்தல்லாத வலயத்தின் 24 முகாமையாளர்கள் மற்றும் 17 சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தியோகத்தர் களுக்கான எரிபொருள் படியொன்று மற்றும் தமது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவாராயின் மேலதிகமான மாதாந்த படியொன்றுமான உத்தியோகத்தரின் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 14,993,976 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரங்கள் வலய முகாமையாளருக்கு மாதாந்தம் ரூபா 25,000 ஆன மேலதிக உச்சத்திற்கும் மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தியோகத்தருக்கு மாதாந்தம் 25 லீற்றர் எரிபொருள் ஆகக்கூடிய அளவிற்கு உள்ளடங்களால கடமைகளின் தேவைப்பாட்டிற்கு மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கிலோமீற்றர் பிரமாணத்தின் அளவுக்கு கணிப்பிடப்பட்டு எரிபொருள் படிகள் | நிதி அமைச்சின் அங்கீகாரம் எழுத்துமூலம் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | இது தொடர்பில் நிதி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் அமைச்சின் அங்கீகாரம் எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | வழங்கப்படுகின்றது. | |
| | (iii) நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 140,000 ஆன தொகை எரிபொருள் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூவருக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டுள்ளன. | நிதி அமைச்சின் அங்கீகாரம் எழுத்துமூலம் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| • 8.3.9 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சு அல்லது மற்றுமொரு அரச நிறுவனத்திற்காக வழங்கப்பட கூடாத போதிலும், அதற்கு முரணாக சபையின் 06 உத்தியோகத்தர்கள் மற்றும் ரூபா 20,126,786 பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் நிதி அமைச்சிற்காக மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு சபையில் செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடைகள் ஊக்குவிப்பு படித்தொகையான ரூபா 2,050,000 இனை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த வாகனங்கள் தேசிய லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அந்த பதவியணியினால் நிறைவேற்றப்பட்ட கடமைகளுக்காக சம்பளங்களை வழங்குதல் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றுள்ளதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எரிபொருள் படியொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும், மீண்டும் அந்த | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகையினை மீளளிப்புச் செய்தல் இடம்பெறுவதில்லை. | |
| | • 9.12 ஆம் பந்தி | (i) | திறைசேரியின் அங்கீகாரமின்றி 2006 ஆம் ஆண்டின் போது சபையினால் அரசரன சரண நிதியம் எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற்காக லொத்தர் பரிசு பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட பரிசுகள் நீரோகா லொத்தர் சீட்டுக்கள் விற்பனை வருமானத்தில் 0.05 சதவீதம் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதியத்தின் ரூபா 181,199,942 ஆன மீதியொன்று நிலவியது. | அசரன சரண நிதியம் பரிசு பெறுநர்களின் பரிசில்களின் வறுமையான மக்களுக்கு சலுகை வழங்கும் நோக்கில் 1998 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீரோகா லொத்தர் சீட்டினை வழங்கப்பட வேண்டிய விற்பனை வருமானத்தில் 0.05 சதவீதம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| | | (ii) | சபையின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினருக்காக ரூபா 7,695,000 தொகையான நலன்புரி கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த கொடுப்பனவினை எதிர்வரும் காலங்களில் செலுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் மாதம் சிங்கள புதுவருடம் மற்றும் நத்தார் விழா ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு நலன்புரி நிதியத்தின் அங்கத்துவத்தினை கொண்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (ii) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் | (i) | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது பதவியணியினருக்கான ஊக்குவிப்பு முறைமையொன்று | தேசிய லொத்தர் சபை அதிமேதகு சனாதிபதியின் கீழ் காணப்பட்ட காலத்தினுய் சனாதிபதி செயலகத்தின் | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | | நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்பாக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 105,509,897 ஆகும். | அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே தேசிய லொத்தர் சபையின் பதவியணிக்காக வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் ஊக்குவிப்புக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது. | |
| | (ii) | அரசின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த படிகளுக்காக நாளொன்றிற்கு ஆகக்கூடியது ரூபா 3,000 வரையான விசேட மேம்படுத்தல் கொடுப்பனவொன்றினை பதவியணிக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திட்டவட்டமான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 5,791,000 ஆகும். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் விசேட மேம்படுத்தல் விசேட கடமைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| | (iii) | சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த வலய முகாமையாளர்கள் மற்றும் விற்பனை | மேலதிக நேரம் மற்றும் கூட்டிணைந்த பணிகள், தொலைபேசிப் படிகள் ஆகியவற்றுக்காக | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேம்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு அரச முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப்பெற்றுக் கொள்ளாது மேலதிக நேர படிகள், கூட்டிணைந்த படிகள் மற்றும் தொலைபேசி படிகள் எனுமாறு ரூபா 5,309,879 ஆன தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசி எல்லையினை விஞ்சி சபையினால் எல்லைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 05 உத்தியோகத்தர் களினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி பெற்றுக் கொள்ளப்பட்ட அழைப்புக்களுக்காக 25,500 தொகை சபையினால் ஏற்கப்பட்டிருந்தது. இதற்கான உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2010.09.01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் மீளதிருத்தம் மேற்கொள்ளல் இடம்பெறுவதில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளின் அடிப்படையில் செயற்படல். |
| (iv) | 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடி/03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோருக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 413,023 ஆன ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. | நாளாந்தம் நிறுவனத்தின் பணிகளுக்கு உதவி செய்தல், அனைத்து ஆவணங்களுக்கும் கையொப்பமிடல், கூட்டங்களுக்கு பங்குபற்றல் ஆகிய கையளிக்கப்பட்ட பெரும்பாலான பணிகள் நிறைவேற்றப் படுகின்றமையால் தேசிய லொத்தர் சபையின் அனைத்து பதவியணிக்கும் உரித்துடைய இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவினை நிறுவனத்தின் அபிவிருத்திற்காக பொறுப்புடன் செயலாற்றும் சபையின் தலைவருக்கும் செலுத்தப்படுகின்றது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டின் போது சபைக்குரிய 4 மோட்டார் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் பெற்ற ரூபா 6,688,650 ஆன வருமானத்தினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் நிதியமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வாகன விற்பனை பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (vi) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | சபையினால் வருடாந்த விளம்பர திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அரச முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது விளம்பர செலவினமாக ரூபா 1,037,345,636 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த வருடங்களிலும் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 1,023,507,765 ஆகும். | விற்பனை பிரிவினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த விளம்பர பாதீட்டினை உள்ளடக்கிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதனை சபையின் ஒட்டுமொத்த பாதீட்டினுள் உள்ளடக்கி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (எ) | 1993 சனவரி 21 ஆந் திகதிய PE1/70/7/Vo11 ஆம் இலக்க பிரதி திறைசேரி செயலாளரின் கடிதம் | அரசிற்காக நடாத்தப்படும் அனைத்து லொத்தர்களிடமிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் 16.5 சதவீதமானது திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிகுள் நடாத்தப்பட்டிருந்த மெகா பவர் மற்றும் தனநிதானய எனும் 02 வகையான லொத்தர்களின் வருமானத்தில் 10 சதவீதமான பெறுமதியானது மாத்திரம் அனுப்பியமையினால் தொடர்ந்தும் திறைசேரிக்கு அனுப்பப்படாத பெறுமதி ரூபா 245,317,469 ஆகும். | தேசிய லொத்தர் சபையில் நடாத்தப்படும் அனைத்து சீட்டிழுப்புக்களிலும் அரசின் திரண்ட நிதியத்திற்கு செலவு செய்யப்படும் சதவீதத்திற்காக அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அறிவுரையின் பிரகாரம் உரிய சதவீதத்தினை அனுப்புதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2(ii) ஆம் பந்தி | ஏற்பாடுகளின் பிரகாரம் ஏனைய படிகளை பெறும் உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் படியொன்றினை செலுத்துவதற்கு உரித்தொன்று இல்லாத போதிலும், சபையின் மேலதிக பொது முகாமையாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 15,000 படி 2017 ஒக்தோபர் 2019 யூன் வரையான காலப்பகுதியினுள் ரூபா 315,000 ஆன தொழில்சார் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்தப் பணிக்கு உரித்தில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தருக்கு வழங்கிய மேற்படி கொடுப்பனவை அறவிடுவதற்கு பொருத்தமான பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. | கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 1.8 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வங்கிக் கணக்கிற்கு செலவாக வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 85,127 தொகையும் பெறுவனவுகளாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 284,544 ஆன தொகையும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான நடைமுறைக் கணக்குகளில் வரவு மற்றும் செலவு மீதிகள் இதுவரையிலும் பெரும்பாலும் தீர்க்கப்பட்டுள்ளது. | குறித்த திருத்தங்களை தாமதமின்றி மேற்கொள்ளல். |
| (ஆ) | சபையினால் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் சேமிப்புக் கணக்கிற்கு விற்பனை முகவர்களினால் பணத்தினை வைப்பு செய்யும் போது வங்கியால் 0.45 சதவீத சேவைக்கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது. அந்த கட்டணத்தினை கணிப்பிடுதல் தொடர்பான தகவல் சபையிடம் இல்லாதிருந்ததுடன் அதற்காக எழுத்து மூல உடன்படிக்கையொன்று மேலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாறு மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் சேகரிக்கும் கணக்கில் எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. மக்கள் வங்கியினால் தேசிய லொத்தர் சபையினுள் பேணிச் செல்லப்படும் வங்கிக் கிளையின் செலவினங்களை பூரணப்படுத்துவதற்காக வங்கி கட்டணமொன்று அறவிடுகின்றது. இந்த | கட்டணத்தினை அறவிடாது பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்காக வங்கி அறவிட்ட கட்டணம் ரூபா 24,577,338 ஆக இருந்ததுடன் கடந்த 05 வருடங்களினுள் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த கட்டணம் ரூபா 213,034,815 ஆகும். இந்த கட்டணத்தினை குறைப்பது தொடர்பில் நடவடிக்கையொன்றாக தனியார் மற்றும் அரச வங்கியொன்றில் கட்டணமின்றி சேகரிக்கும் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், கட்டணம் அறவிடும் வங்கியில் சேகரிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

வங்கிக் கட்டணம் அறவிடுவதற்காக வங்கியினால் அடிப்படையாகக் கொள்ளப்படுவது நாட்டின் அனைத்து வங்கிகளிலும் வைப்புச் செய்யப்படும் தொகை அல்ல என்பதுடன் மக்கள் வங்கியின் லிபர்ட்டி பிளாசா கிளையில் இடம்பெறும் வைப்புக்களுக்கு மாத்திரம் ஆகும். (மேலும், பிலியதேவ கிளையினால் 0.5% அறவிடப்படுகின்றது) இந்த வங்கி கட்டண அளவினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வங்கியுடன் கலந்துரையாடி குறித்த சதவீதத்தினை 0.5 இல் இருந்து 0.045 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் செயற்பாட்டு நடைமுறைகளில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வங்கிக் கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சேமிப்புக்களை அடிப்படையாகக் கொள்ளாது நிலையான வங்கி கட்டணமொன்றின் கீழ் கிளையினை நடாத்திச் செல்வதற்கு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன.

## 1.9 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் அதன் கணக்குகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மத்தியப்படுத்தப்பட்ட Sage ACCPAC எனும் பெயருடைய கணனி மென்பொருள் 2016 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப் பட்டிருந்தமையின் காரணத்தினால் அந்த மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தது. முன்னர் நிலவிய மத்தியப்படுத்தப்பட்ட முறையின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நிலவிய நம்பகத்தன்மை இந்த பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் கேள்விக்குரியதாகவிருந்தது. அத்துடன் உரிய வேறுபடுத்தல்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்களின் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் இந்த மென்பொருளினை அறிமுகப்படுத்திய கம்பனி நிராகரித்திருந்தது. | மத்தியப்படுத்தப்பட்ட Sage Accpac கணனி மென்பொருளினை பயன்படுத்தும் போது ஏற்படும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியொன்று இன்றளவிலும் பிரதான பேரேட்டில் எஞ்சியுள்ளது. இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதினை எதிர்காலத்தில் தடுப்பதற்காக Accpac கட்டமைப்பிற்கு புதிதாக இணைக்கப்பட்ட கணனி மென்பொருளொன்றின் பிரதான பேரேடு அகற்றப்பட்டு தனித்தினயான மென்பொருள்களாக பயன்படுத்தப்படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட கணனி கட்டமைப்பின் காரணமாக மிகவும் துல்லியமான மற்றும் செயற்திறனாக பேணிச் செல்ல முடியுமாகவிருந்தது. | கணனி மென்பொருட்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய கட்டுப்பாட்டு சூழலொன்றை உருவாக்குதல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

| | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| வரிக்கு பின்னரான இலாபம் (இலாபப் பங்கு செலுத்துவதற்கு முன்னர்) | 978,585,273 | 38,092,926 | 139,805,208 | 414,761,431 | 241,016,039 |
| ஊழியர் பணிக்கொடை | 458,633,719 | 420,862,040 | 375,410,032 | 380,279,707 | 320,462,652 |
| **<u>அரசிற்கு செலுத்திய வரி</u>** | | | | | |
| வருமான வரி | 717,469,811 | 1,174,402,368 | 484,610,312 | 482,128,237 | 669,785,229 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 281,800,099 | 286,551,044 | 235,767,246 | 285,776,997 | 253,267,754 |
| பெறுமதி சேர் வரி | 911,198,767 | 890,352,095 | 742,298,500 | 706,868,280 | 573,252,862 |
| திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு | 2,637,962,104 | 2,426,947,888 | 2,016,986,336 | 2,445,594,544 | 2,130,953,970 |
| <u>பெறுமானத் தேய்வு</u> | | | | | |
| மோட்டார் வாகனங்களின் பெறுமானத் தேய்வு | 27,022,836 | 19,290,936 | 55,627,510 | 54,979,532 | 48,727,716 |
| ஏனைய பெறுமானத் தேய்வு | **53,260,748** | **60,229,778** | **70,474,209** | **68,497,174** | **60,061,990** |
| | 6,065,933,417 | 5,142,368,354 | 4,120,979,353 | 4,838,885,902 | 4,297,528,212 |

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி இலாபம் ரூபா 978,585,273 ஆகும். 2018 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த வழுக்களை திருத்தி அந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களை மீள தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அந்த ஆண்டின் நட்டம் ரூபா 98,174,870 இனால் குறைவடைந்தமையால் நிதிப் பெறுபேறுகள் ரூபா 38,392,926 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 1,016,678,199 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு வருடங்களின் நிதிப்பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்யும் போது நிதி விளைவுகளில் ஊழியர் மிகையூதியம், நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரி ஆகியவற்றை மீள சீராக்கும் போது 2015 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பில் குறைவொன்றும் 2016, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அதிகரிப்பொன்றினையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய வருடங்களின் சபையின் இலாபத்தன்மை மற்றும் செயற்படு மூலதன விகதம் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | விகிதம் | ஆண்டு 2019 | 2018 |
|---|---|---|---|
| (i) | மொத்த இலாப (விகிதம்) | 14.09 | 14.45 |
| (ii) | தேறிய இலாபம் / (நட்டம்)(சதவீதம்) | 4.43 | -0.81 |
| (iii) | நடைமுறைச் சொத்து விகிதம் | 2.20:1 | 1.80:1 |
| (iv) | விரைவுச் சொத்து விகிதம் | 2.18:1 | 1.78:1 |

2018 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியம் மற்றும் தேசிய சிறுநீரக நிதியத்திற்கு மேற்கொண்ட அனுப்பல்களின் அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்த வரித்தொகை அந்த நிதியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் தேறிய இலாப வீதம் மற்றும் நடைமுறை மற்றும் விரைவு சொத்துக்களின் விகிதம் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் நாளாந்த சேவைகளுக்காக பதவியணியொன்றினை ஏற்படுத்தி அதற்காக சட்ட உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும், சபையின் சட்ட சேவைகள் பெறுகையொன்றின் மூலம் அல்லாது வெளிவாரி சட்டவல்லுனர் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், உரிய சட்ட சேவைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பில் தேடிப்பார்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு பெற்றுக்கொண்ட சட்ட சேவைகளுக்காக ரூபா 3,108,097 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு வாணிப உச்ச | தேவைப்பாட்டினை கருதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட சேவைகள் அல்லது தேசிய லொத்தர் சபையில் பதிவு செய்துள்ள சட்டத்தரணிகளின் குழாத்தின் (Panel of Lawyers) சட்டத்தரணியின் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கொன்றுக்காக 03 சட்டத்தரணிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சனாதிபதியின் சட்டத்தரணி யொருவர் நீதிமன்றத்தில் தோன்றும்போது கனிஷ்ட | சட்டமா அதிபரிடம் வினவி உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டவாறு உள்ள வழக்கொன்றில் ஒவ்வொரு வழக்குத் தடவைகளுக்காகவும் சட்டத்தரணிகள் மூவருக்கு 05 வழக்குகளுக்காக செலுத்தியுள்ள சட்ட கட்டணம் 459,275 ஆகும். | நிலையில் உள்ள சட்டத்தரணியுடன் தோன்றுதல் கட்டாயமாகும். அதனால் அந்த சனாதிபதி சட்டத்தரணி கனிஷ்ட சட்டத்தரணியுடன் வழக்கிற்கு முன்னிலைப்படுத்தப் படுவதுடன் ஏனைய சட்டத்தரணி அந்த வழக்கின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியாக செயற்படுவார். | |
| (ஆ) | விற்பனை முகவர்களினால் மீள அனுப்பப்படும் லொத்தர் சீட்டுக்களுக்காக மீண்டும் ஒரு தடவை லொத்தர் சீட்டுக்களை வழங்கும் போது சபையினால் வங்கிக்கு மீளளிப்பு கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று (Return Reimbursement Voucher) தயாரிக்கப்பட்டு குறித்த முகவரின் மீள் அனுப்புதல்களுக்கு உரிய சீராக்கங்களை வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளுதல் வங்கிக்கு ஒப்படைக்கப்படும். அதன் காரணமாக வங்கியில் அதற்காக 0.045 சதவீதம் சேகரிப்பு தரகு பணம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 யூன் வரையான காலப்பகுதியில் அவ்வாறு இரு தடவைகள் செலுத்தப்பட்ட தரகுப் பணம் ரூபா 18,220,437 ஆக இருந்ததுடன் அதனை கணிப்பிடுவதற்கு உரிய தகவல்கள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அந்தப் பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி நட்டம் அறவிடப்பட வேண்டியமை. |
| (இ) | ஆக்கபூர்வமான விளம்பர பிரதி முகவர் நிறுவனத்தினால் உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்பு நிறைவு செய்யப்பட்டு சபைக்கு | பெறுகை நடைமுறையின் ஊடாக இந்த முகவர் நிறுவனம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த | உடன்படிக்கையில் மேற்கொள்ளப் படும். திருத்தங்களுக்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்குரிய அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த விளம்பரங்கள் உரிய ஊடக நிறுவனங்களில் ஒளிபரப்பப்படுவதுடன் ஒவ்வொரு தடவைக்கும் அந்த விளம்பர நிறுவனத்திற்கு மொத்த சேவைக் கட்டணத்தில் 11.5 சதவீதமானது செலுத்துதல் சிக்கனமற்றதாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 40,810,083 தொகை அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த வரைவிலக்கணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த 11.5% தரகுப் பணம் செலுத்தாது செயற்பட வேண்டும் எனின் முகவர் நிறுவனங்களிலிருந்து விலகி செயற்பட வேண்டியதுடன் அது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதுடன் இந்த தரகுப் பணத்தை செலுத்துதல் விற்பனைத் துறையினுள் இடம்பெறும் சாதாரண நடைமுறையொன்றாகும். | பொருளாதார நலனை நிறுவனத்துக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | விளம்பர நிறுவனங்கள் நிரமாணித்த இலத்திரனியல் விளம்பர அறிவித்தல்களின் உரித்து சபைக்கு சொந்தமாக்கிக் கொள்வதில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக புதிய விளம்பர நிறுவனத்தினால் பழைய விளம்பர நிறுவனம் உற்பத்தி செய்த விளம்பரங்களை மீள ஒளிபரப்பும் போது புதிய விளம்பர நிறுவனத்திற்கு அந்த ஒளிபரப்பு கட்டணத்தின் 11.5 சதவீத பொருளாதார கொடுப்பனவினை மேற்கொள்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த பணம் ரூபா 7,371,544 ஆகும். | பெறுகை நடைமுறையின் ஊடாக புதிய முகவர் நிறுவனத்தை இணைத்துக் கொள்ளும் போது பழைய முகவர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இலத்திரனியல் விளம்பர அறிவித்தல்களின் இடம்பெறும் திருத்தங்கள் புதிய விளம்பர நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் பழைய நிறுவனங்களின் இலத்திரனியல் விளம்பர அறிவித்தல்களை ஒளிபரப்புவதற்காக ஒளிபரப்புக் கட்டணத்தில் 11.5% தொகையினை செலுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டுள்ளது. ஆரம்ப உற்பத்தியில் மாற்றமொன்று ஏற்படாத அனைத்து உற்பத்திகளும் நேரடியாக ஊடகங்களுக்கு விடுவிக்கப்பட்டு ஊடக இணைப்பு நிறுவனத்தின் தரகுப் பணமான 3.5% மாத்திரம் செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொருளாதார ரீதியில் நலன் ஏற்படும் வகையில் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (உ) | தேசிய லொத்தர் சபையின் நாளாந்த சீட்டிழுப்புக்கள் தொலைக்காட்சியில் | அனைத்து லொத்தர்களுக்காகவும் தொலைக்காட்சியில் | உடன்படிக்கை யினை திருத்தி உரிய |

| | | | |
|---|---|---|---|
| | ஒளிபரப்புதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவதுடன் தொடர்புடைய பணிகளை சபையினால் மேற்கொள்ளாது அந்த பணிகளுக்காக நடுவர் நிறுவனமொன்றாக விளம்பர நிறுவனங்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டதாக அறிக்கை சமர்ப்பித்து அதற்காக 15 சதவீத சேவைக்கட்டமொன்றினை விளம்பர நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறானதொரு இடை நடுவரின் ஒத்துழைப்பின்றி தற்போது நடாத்தப்படும் செவன லொத்தர் சீட்டிழுப்பின் ஒளிபரப்பு பணிகளை சபையின் பதவியணியினால் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக அதற்காக செலவிட எதிரபார்த்த பணத்தில் 2019 செப்தம்பர் மாத இறுதியில் ரூபா 4,464,672 தொகையை சேகரிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், 2019 ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் அந்த லொத்தரின் ஒளிபரப்பு பணிகள் புதிய ஒளிபரப்பு நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டமையால் மேற்குறிப்பிடப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டிற்கு உரியதாக இறுதி மூன்று மாதங்களுக்காக சேமிக்கக்கூடியதாக இருந்த ரூபா 1,262,806 தொகை சபைக்கு இழப்பாகியிருந்தது. மேலும், ஏனைய 08 லொத்தர்களுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காது அந்த பணிகள் விளம்பர முகவர் நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொண்டமை அறிக்கையிடப்பட்டு ரூபா 73,682,624 ஆன சிக்கனமற்ற ரீதியில் செலவிடப்பட்டிருந்தது. | சீட்டுழுப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் உத்தியோகபூர்வ பெறுபேறுகளை வெளியிடுவதற்கு அந்த நிறுவனத்தினால் விற்பனை முகவர் நிறுவனத்திற்கு 15% சேவைக் கட்டணமொன்று செலுத்தப்படும். இந்த கொடுப்பனவிற்காக சபையின் தலையீடு இடம்பெறுவதில்லை என்பதுடன் செவன லொத்தர் சீட்டுக்காக முகவர் நிறுவனமொன்று இல்லாதிருந்த காலப்பகுதியில் அந்த சேவைக் கட்டணத்தை குறைத்து அந்த நிறுவனத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உற்பத்தி, ஒளிபரப்பு மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் ஆகிய பணிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகள் சபைக்கு நேரடியாக மேற்கொள்வதில் நிலவும் அசௌகரியத்தினை கருத்திற் கொண்டு செவன லொத்தர் சீட்டுக்காக முகவர் நிறுவனமொன்று இணைத்துக் கொள்ளப்பட்டது. | சிக்கனமற்ற செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | 2016 ஆம் ஆண்டு முதல் பெறுகை நடைமுறையினை பின்பற்றாது வலைத்தளத்தில் விளம்பரங்களை வெளியிடுதல் பிரசுரித்தல், ஊடக இணைப்பு நிறுவனம் (Group Media) | விளம்பர துறையின் பல்வேறு விளம்பரப்படுத்தல் முறைமைகள் காலத்திற்கு ஏற்ற வகையில் இலத்திரனியல் பயன்பாட்டுடன் | சபையினால் மேற்கொள்ளக் கூடிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து விளம்பர |

| | | | |
|---|---|---|---|
| | இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உரிய கிரயத்தினை நேரடியாக ஊடக திட்டமிடல் நிறுவனத்தினால் பெற்றுக் கொண்டு அந்த கிரயத்திலிருந்து 11.5 சதவீத தொகை குறித்த வலைத்தளத்தில் விளம்பரத்தினை பிரசுரிக்கும் நிறுவனமும் 3.5 சதவீத ஊடக இணைப்பு நிறுவனத்தினாலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே சபைக்கு அறிவிக்காது வலைத்தளத்தில் அறிவித்தல்கள் ஊடக இணைப்பு நிறுவனத்தின் வலைத்தளத்தினுள் காட்சிப்படுத்துவதற்காக ரூபா 1,496,716 அறவிடப்பட்டிருந்தது. சபையினால் இந்த வலைத்தளத்தின் அறிவித்தல்களை நிர்மாணித்தல் மற்றும் அந்த அறிவித்தல்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பியமையால் 2019 ஆம் ஆண்டின் போது சேமித்த பெறுமதி ரூபா 2,722,353 என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளுதல் அதன் புதிய போக்காக காணப்படுவதுடன் தேசிய லொத்தர் சபையும் அதனை செயற்படுத்தி பார்த்துள்ளது. எனினும் இது தொடர்பில் போதியளவான அனுபவம் சபையில் இல்லாதிருந்ததுடன் குறித்த விலை தொடர்பில் தொழில்நுட்ப தகவல்களை பெற்றுக்கொள்ளும் சிரமங்கள் நிலவின. அதன் போது சட்டரீதியாக ஊடக இணைப்பு நிறுவனம் (பசழரி ஆ) சர்வதேச ரீதியான அனுபவமுடைய நிறுவனமாக காணப்பட்டமையால் அவர்களின் சேவையினை பெற்றுக்கொள்ளுதல் மிகவும் பொர்ருத்தமானது என்பது என அறியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | பணிகளை மேற்கொள்ளல். |
| (எ) | சபையின் லொத்தர் பெறுபேறுகளை பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் வானொலியில் ஒளிபரப்புவதற்கு உரிய பெறுகை பணிகளை மேற்கொள்ளாது விளம்பர அறிவித்தல்கள் விளம்பர முகவர்கள் மூலம் அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்காக வானொலி மற்றும் பத்திரிகை நிறுவனங்களின் பற்றுச்சீட்டுப் பெறுமதியில் 15 சதவீத தொகை அந்த நிறுவனம் மேலதிகமாக அறவிட்டிருந்தது. அவ்வாறு 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக 08 லொத்தர் சீட்டுக்களுக்கு செலுத்தப்பட்டிருந்த முகவர் தரகுப் பணம் ரூபா 31,683,786 ஆகும். ஒரு லொத்தர் சீட்டின் பத்திரிகை மற்றும் வானொலி | பத்திரிகையில் பெறுபேறுகளை பிரசுரித்தல் ஏனைய அறிவித்தல்களிலிருந்து வேறுபட்டு காணப்படும் விதத்தில் அவற்றினை பிரசுரிப்பதன் மூலம் கூடுதலான கவர்ச்சியை பெற்றுக் கொள்ள முடியும். ஆகக்குறைந்த செலவினத்தின் கீழ் இவ்வாறான முறைமையில் பத்திரிகைகளில் இடம் ஒதுக்கி அதன் மூலம் கூடுதலனா நலனை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பத்திரிகை வாசிக்கும் மக்கள் தொகுதிகள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்று குறித்த பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் பக்கங்களின் பிரகாரமான வீதங்கள் தொடர்பில் | சபையின் மூலம் மேற்கொள்ளக் கூடிய பணிகளை மேற்கொள்ளும் அதன் இயலுமை தொடர்பில் ஆராய்ந்து செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊடக ஒலிபரப்புக்கு உரிய அறிவித்தல்களை கையளித்தல் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் 2017 யூலை மாதம் முதல் 2019 யூலை மாதம் வரையான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட முகவர் தரகுக் கட்டணம் ரூபா 2,271,588 ஆகும். | கற்கையொன்று மேற்கொண்டு அறிவித்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஏ) | லொத்தர் சீட்டிழுப்புக்களின் பெறுபேறுகளை பத்திரிகை அறிவித்தலொன்றில் பிரசுரிக்க வேண்டிய ஆகக்குறைந்த அளவு தொடர்பில் கவனம் செலுத்தாமையால் பத்திரிகைகளில் பல்வேறு அளவுகளில் பல்வேறு கட்டணங்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சபையினால் நாளாந்தம் பிரசுரிக்கப்படும் 04 பத்திரிகைகளின் ஒரு பக்கத்தின் சரிபாதி பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்காக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை முறையே ரூபா 55,806,970, ரூபா 67,052,788 மற்றும் ரூபா 42,686,370 ஆகும். அவ்வாறே, அனைத்து லொத்தர் சீட்டிழுப்புக்களின் பெறுபேறுகள் குறித்த நாளின் மறுநாள் நாடெங்கிலும் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்கள் மற்றும் பகிர்ந்தளிப்போருக்கு பெறுபேறின் குறிப்பொன்றை வழங்குதல் இடம்பெறுகின்றது. அவ்வாறே வலைத்தளங்களில் அறிவித்தல்களை வெளியிடுதல் மூலம் பத்திரிகைகளின் அறிவித்தல்களின் அளவு தொடர்பில் உரிய கற்கையொன்று மற்றும் ஆராய்ச்சியொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிக்கும் போது ஏனைய விளம்பரங்களிலிருந்து வேறுபட்டு காண்பிக்கும் வகையில் அவற்றை பிரிசுரிப்பதன் மூலம் கூடுதல் கவர்ச்சியனை பெற்றுக்கொள்ள முடியும். ஆகக்குறைந்த செலவினத்தின் கீழ் இவ்வாறான முறைமையில் பத்திரிகையில் இடம்ஒதுக்கி அதன்மூலம் கூடுதலான நலனைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், பத்திரிகை வாசிக்கும் வாசகர்களை அடிப்படையாகக் கொண்டு அதன் அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு குறித்த பெறுபேறினை பிரசுரிக்கும் பக்கத்தின் பிரகாரம் வீதங்கள் தொடர்பில் கற்கையொன்றினை மேற்கொண்டு பிரிசுரிக்கப்படும். | நுகர்வோரின் தேவை தொடர்பில் கற்கை யொன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் தேவையான அளவினை திட்டவட்டமாக தீர்மானித்தல். |
| (ஐ) | தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்புக்களில் அகற்றப்பட்ட விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களை | 2015 ஆம் ஆண்டு முதல் தேசிய லொத்தர் சபையினால் பல்வேறு சீட்டிழுப்புக்களில் 7 | பொருத்தமான இயந்திரங்களை கொள்வனவு செய்வதன் மூலம் |

களஞ்சியப்படுத்துவதற்கு சபைக்கு சொந்தமான பொக்செல் வீதியில் அமைந்துள்ள காணியில் தற்காலிக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதன் களஞ்சியப்படுத்தும் இயலுமை உள்ள போது அதற்காக சபையினால் 2015 ஆம் ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 3136 வர்க்க அடி அளவிலான களஞ்சிய இடவசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் 6217 வர்க்க அடிகள் வரை அதிகரிக்கப்பட்டு அதற்காக வருடமொன்றிற்கு ரூபா 12,572,495 சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அகற்றப்படும் லொத்தர் சீட்டுக்கள் 06 மாதங்கள் விஞ்சும் போது துண்டுகளாக வெட்டப்பட்டு அவற்றை அகற்றும் நடைமுறையொன்று இல்லாதிருந்தமை இந்த கிரயத்திற்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

களஞ்சியங்கள் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 3081 வர்க்க அடி பகிர்ந்தளிப்பு பிரிவினால் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. பரப்பளவு 784 வர்க்க அடி கொண்ட களஞ்சியமொன்று போக்குவரத்துப் பிரிவினால் பயன்படுத்தப்படுவதுடன் வாகனங்களிலிருந்து அகற்றப்படும் டயர், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பழைய ஆவணங்கள் ஆகியன இங்கே களஞ்சியப்படுத்தப்பட்டன. பரப்பளவு 784 வர்க்க அடிகள் ஆக காணப்பட்ட இரு களஞ்சியங்கள் ஆவணங்களை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதுடன் அந்த களஞ்சியங்களினுள் மேம்படுத்தல் பொருட்கள், சிதைவடைந்த பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளன. இதுவரையிலும் 03 களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விற்பனையின் பின்னர் எஞ்சிய லொத்தர் சீட்டுக்களை எடுத்துச் செல்லும் விலைக்கேள்வியினை பெற்றுக் கொண்டு கம்பனி அந்த லொத்தர் சீட்டுக்களை எடுத்துச் செல்ல மறுதலித்துள்ளது. அதன் காரணமாக லொத்தர் சீட்டுக்கள் நஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட் (National Paper Company Limited) நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் பத்திரமொன்று

சபையினால் நிறைவேற்றக்க கூடிய பணிகளை மேற்கொண்டு குறித்த பொருட்களை அகற்றுதல் இடம்பெறுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அனுமதியினை பெற்றுக் கொண்ட பின்னர் 03 களஞ்சியங்களை விடுவிக்கும் இயலுமை காணப்படுகின்றது. | |
| (ஒ) | கடந்த வருடங்களில் செலுத்த வேண்டிய செலவினமாக தவறாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்ட ரூபா 10,962,695 ஆன விளம்பர செலவினமொன்று மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டு ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது வருமான வரியாக ரூபா 3,069,554 கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்தது. | 2018 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட விளம்பர செலவினங்களை விட குறைவாக செலவினம் மேற்கொண்டமையால் எஞ்சிய தொகை ஏனைய வருமானங்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்துள்ளது. இவ்வாறான சம்பவங்களை குறைத்துக் கொள்ள தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நடைமுறைக்கு சாத்தியமான முறையில் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 825,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த PS-2354 இலக்கமுடைய வாகனம் 2018 யூன் 12 ஆந் திகதி அவசர விபத்திற்கு உள்ளான காரணத்தினால் அந்த நிறுவனம் கைதவிர்க்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக காப்புறுதி சபைக்கு அறிவிக்கப்பட்டு அதற்கு உரிய காப்பீட்டு தொகை ரூபா 600,000 ஆகும். | PS-2354 ஆம் இலக்கமுடைய வாகனம் 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டது ஆகும். இந்த வாகனம் இதுவரையிலும் 08 வருட காலமாக சபையின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் முன்பு இந்த வாகனம் ரூபா 825,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த விபத்திற்குரிய காப்புறுதிக் கம்பனி வாகனத்தை அப்புறப்படுத்தி ரூபா 600,000 தொகையை சபைக்கு செலுத்துவதற்கு இணங்கியுள்ளது. பயன்படுத்தப்பட்ட இவ்வாறான வாகனமொன்றின் சந்தைப் பெறுமதி ரூபா 400,000 - ரூபா 500,000 அளவில் உள்ளமையால் காப்புறுதிக் கம்பனியினால் அப்புறப்படுத்தி வழங்குவதற்கு இணங்கியுள்ள தொகையை பெற்றுக் கொண்டால் அது சபைக்கு நலனான தன்மையை | துரிதமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்படுத்தும் என்பது தென்படுகின்றது. எனினும், இது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியாக கற்கையொன்றினை மேற்கொண்டு தீர்மானமொன்று எடுக்க வேண்டும் என்பதும் அதற்காக முறையான தொழில்நுட்பக் குழு ஒன்றினை நியமித்துள்ளதுடன் அவர்களின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் அறிவுரையை பெற்றுக் கொள்ளும் வரையில் குறித்த பிரிவினால் வாகனத்தின் நட்டஈட்டு தொகையை பெற்றுக் கொள்வதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசிற்கு நட்டம் ஏற்படாத வகையில் மேற்படி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தேசிய லொத்தர் சபையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ள இணைப்பு உத்தியோகத்தரொருவருக்கு கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்த KV-0392 இலக்கமுடைய வாகனம் சபைக்கு அறிவிக்காது 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட பணயத்திற்காக பயன்படுத்தும் போது விபத்திற்கு உள்ளாகியிருந்தது. அந்த வாகனத்தினை பழுதுபார்ப்பதற்காக ரூபா 538,650 ஆன கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்த போதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | KV-0392 வாகனத்தின் விபத்து தொடர்பிலான பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூபா 520,925 தொகை செலவிடப்பட்டுள்ளதுடன் அந்த முழுமையான தொகை காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல். |
| (இ) | 2018 சனவரி 21 ஆந் திகதி சீட்டிழுக்கப்பட்ட 32 ஆவது கொழும்பு எயார்போர்ட் சுப்பர்ட்ரோ லொத்தர் சீட்டிழுப்பு இரத்துச் | 32 ஆவது கொழும்பு எயார்போர்ட் லொத்தர் சீட்டுக்கள் 15,000 அச்சிடப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவம் மற்றும் | ஆரம்ப விசாரணைகளை நடாத்தி பொறுப்புக் கூற வேண்டியவர் |

செய்யப்பட்ட ரூபா 627,750 பெறுமதியான காணாமல் போன 135 லொத்தர் சீட்டுக்கள் காணப்பட்டதுடன் அவற்றுள் தனியார் விளம்பர நிறுவனத்தின் மூலம் 66 லொத்தர் சீட்டுக்களும் சபையின் விளம்பர பணிப்பிரிவின் மூலம் 69 லொத்தர் சீட்டுக்களும் காணாமலாக்கப்பட்டிருந்தது. குறித்த சீட்டிழுப்பின் செல்லுபடியான 1,027 லொத்தர் சீட்டுக்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர் 26,140 ஆன தொகை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் சந்தைப் பெறுமதி ரூபா 5,607,420 ஆக காணப்பட்டது.

முன்னாள் பணிப்பாளர் சபையினால் உரிய விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர் தொடர்ந்தும் அந்த லொத்தரை நடாத்திச் செல்லுதல் மூலம் ஏற்படக்கூடிய நட்டத்தினை குறைத்துக் கொள்ளும் நோக்கில் அந்த சீட்டிழுப்பு வரையில் விற்பனை செய்யப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கையில் சீட்டிழுப்பதற்காக (5810) 2018/01/21 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெற்றிருந்தது. அந்த லொத்தர் சீட்டில் விற்பனைப் பணிகள் தனியார் விற்பனை முகவர்கள் மூலம் நிறுவனத்தின் பதவியணியினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது சீட்டிழுப்பதற்கு தயார்ப்படுத்தப்பட்ட பின்னர் 154 லொத்தர் சீட்டுக்கள் காணாமல் போயிருந்த சம்பவம் பதிவாகியுள்ளதுடன் அதன்போது உயர் முகாமைத்துவத்தின் அனுமதி மற்றும் இணக்கப்பாட்டுடன் பத்திரிகை அறிவித்தலொன்று மேற்கொள்ளப்பட்டு (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) அந்த லொத்தர் சீட்டுக்களில் (விற்பனை செய்த / விற்பனை செய்யப்படாத) அவற்றை மீண்டும் தேசிய லொத்தர் சபைக்கு ஒப்படைக்குமாறு வெளியிடப்பட்டுள்ளதுடன் அதன் போது இருபது லொத்தர் சீட்டுக்கள் சபைக்கு கிடைத்துள்ளது. அந்த லொத்தர் சீட்டுக்கள் மீண்டும் சீட்டிழுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், அந்த பத்திரிகை அறிவித்தலில் எவரேனும் ஒருவருக்கு லொத்தர் சீட்டுக்களின் அடையாளத்தினை சான்றுப்படுத்த முடியாதிருப்பின் சீட்டிழுப்பினை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு சீட்டிழுப்பதற்கு முந்தைய நாள் குறித்த 135 லொத்தர் சீட்டுக்களுக்கு பொலிஸ்

களை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

முறைப்பாடு செய்யப்பட்டு சீட்டிழுப்பிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த 135 லொத்தர் சீட்டுக்களை செல்லுபடியான லொத்தர் சீட்டுக்களாக கருத்தில் கொள்ள முடியாதென என்பததை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவ்வாறே தனியார் விற்பனை மேம்படுத்தல் முகவர் நிறுவனத்தினால் விற்பனை செய்வதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட 1,027 லொத்தர் சீட்டுக்களுக்காக அறவிட வேண்டிய ஐ.அ.டொலர் 26,188.5 அண்ணளவாக ரூபா 4,059,217 அறவிடுவதற்காக முன்னாள் பணிப்பாளர் சபையின் மற்றும் முகாமைத்துவத்தின் இணக்கப்பாட்டுடன் கொழும்பு மோசடி புலனாய்வு பிரிவிற்கு முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டு அது சட்டரீதியாக நிறுவனத்திடமிருந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம். தற்போது சபை மற்றும் ஏனைய தரப்பினரின் தரப்பிலிருந்து உத்தியோகத்தர்களை வரவழைத்து அவர்களிடமிருந்து பதிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன் உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. இதன் பெறுமதியினை கணிப்பீடு செய்யும் போது லொத்தர் சீட்டுக்களின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 30 அல்ல ஐக்கிய அமெரிக்க டொலர் 25.5 என கருதி கணிப்பீடு செய்ய வேண்டும். இடைதரகர்கள் அனைத்து தரப்பினரிடமும் சபை அறவிடுவது குறித்த தரகுப் பணமான (15%) கழித்த பின்னராகும்.

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த வருடங்களின் போது கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடை தொகையினை மீள சபைக்கு அறவிடுமாறு பொது முயற்சிகள் தொடர்பான குழு 2013 மார்ச் 21 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அந்த தொகையினை அறவிடுவதற்கு பெறவேண்டிய தொகையான நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கூடுதலாக செலுத்தியுள்ள பணிக்கொடை தொகையை சபைக்கு மீளளிப்பு செய்யுமாறு உரிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஓய்வுபெற்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 7,392,287 ஆன மிகையூதியம் அறவிடுதல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மிகையூதியம் செலுத்துதல் வெகுமதியொன்றினை வழங்குவதற்கு ஒப்பாக கருதப்படுகின்றமையால் அவர்கள் மீளளிப்பு செய்யாத போது அந்த பணத்தை அறவிட முடியாது என அப்போது நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் இணக்கப்பாடு பெற்றுக்காள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2014 நவம்பர் 04 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் போது வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான பொன்சோல் வீதியின் அமைந்துள்ள 112 பேர்ச் அளவான காணியின்புதிய கட்டிடமொன்றினை நிர்மாணிக்க வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டிடத்தினை திட்டமிடல் பணிகளுக்காக வீடமைப்பு நிர்மாண கலைஞர் ஒருவர் தெரிவு செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இந்த | புதிய அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள மதியுரை சேவை நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு விலைக்கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் வரையிலான வேலைப்பகுதி நிறைவு செய்யப்பட்டு புதிய மதிப்பீட்டிற்காக அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று 2018.03.21 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 2018.04.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தற்போது அரசில் | குறித்த கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் இணக்கப்பாடு பெற்றுக்காள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிர்மாணங்கள் 2020 யூன 01 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது சபையின் அலுலவலகம் மற்றும்களஞ்சிய பணிகள் நடாத்திச் செல்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்திற்காக மாதாந்தம் ரூபா 101,532,720 தொகையும், கட்டிடத்தின் அறைகளை ஒதுக்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றுக்காக ரூபா 3,175,057 தொகை வற் வரியுடன் செலுத்தப்பட்டிருந்தது. | நிலவும் கொள்கைகளின் பிரகாரம் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்க முடியாதென சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளமையால் மாதாந்த வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு நிறுவனத்தின் பணிகள் நடாத்திச் செல்லப்படுகின்றன. |

**3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய லொத்தர் சபையினால் மீளாய்வாண்டின் போது நடமாடும் விளம்பர வண்டிகள் 21 இற்காக சாரதி மற்றும் விளம்பர உத்தியோகத்தரொருவர் படி ஈடுபடுத்தி ரூபா 119,386,000 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த விற்பனையின் அடிப்படையில் 17.5 சதவீதமான விற்பனை தரகு ரூபா 20,892,550 ஆன தொகை எவ்வித ஆவண சான்றுதல்களும் இல்லாது அந்த பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த பிரிவில் பணிப்பொறுப்பு, பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், குறித்த பணியில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட எரிபொருள் தொடர்பான விபரங்கள் ஓட்டக் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நடமாடும் விளம்பர் பிரிவின் விற்பனை மேம்படுத்தல் மற்றும் விளம்பரங்களுக்காக செயற்படுத்தப்படும் பிரிவொன்று ஆகும். அந்த பிரிவின் பணிப்பொறுப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் பணிப்பாளர் சபை பத்திரமொன்று எதிர்வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு அனுப்பப்பட உள்ளது. | சரியான ஆவணங்களை பேணுவதன் மூலம் உரிய பணிகளை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதவியணிக்காக பேணிச் செல்லப்படும் பல்வேறு 04 நிதியங்கள் கணக்காய்விற்கு உட்படுத்தும்போது தனிப்பட்ட கணக்காய்வாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 180,000 ஆன தொகை மற்றும் கடந்த வருடத்தில் ரூபா 354,000 தொகையும் கணக்காய்வுக் கட்டணங்களாக நிதியங்களிலிருந்து இந்த கணக்காய்வு கட்டணங்கள் உரிய நிதியங்களினால் செலுத்தப்படாது சபையின் நிதியத்திலிருந்து செலுத்துவதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிதியத்தினை கணக்காய்வு செய்யும் தனியார் கணக்காய்வு நிறுவனம் நீண்ட காலமாக செயற்படுகின்றமையால் அவர்களிடம் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.<br>• ஊழியர் நலன்புரி நிதிய பிரமணாக் குறிப்பின் பிரகாரம் அந்த நிதியத்தின் அனைத்து செலவினங்களும் சபையினால் மேற்கொள்ளப்படும்.<br>• மருத்துவ காப்புறுதி நிதியத்திற்கு நிதியினை அளிப்பது சபையினால் மற்றும் நிதியத்தில் காசு எஞ்சியிருப்பின் அதனை மீண்டும் சபைக்கு அனுப்ப வேண்டும். அதன் மூலம் சபையினால் அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.<br>• ஊழியர் நலன்புரி மற்றும் சேமிப்பு நிதியம் தொடர்பில் கணக்காய்வு கட்டணங்களை செலுத்தும் போது முன்னாள் உயர் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. வருடாந்த வருமான வரி கணிப்பீட்டினை மேற்கொண்ட போதிலும் அந்த நிறுவனத்தின் கணக்காய்வு சேவை நீண்ட காலமாக பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.<br>அவ்வாறே கணக்காய்வு கட்டணத்தை செலுத்தும் போது அந்த கொடுப்பனவுகள் தலைவரின் | நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிகளை முன்னெடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்துடன் குறித்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | சபையில் பதிவு செய்துள்ள விற்பனை முகவர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு பணிப்பாளர் சபையினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக செயற்படாது ரூபா 8,290,055 தொகையான மேலதிக கிரயமொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக நாணய கடிதங்கள் காப்புறுதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அதற்காக 2016, 2017 ஆண்டுகளுக்காக செலுத்தப்படாதுள்ள ரூபா 23,365,438 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | காப்பீட்டு நிறுவனத்தினால் செலுத்தப்படாத கடன் மீதிகளுக்கு உரிய நலன் கோரப்பட்ட போதிலும், அந்த விண்ணப்பங்கள் உரிய காலப்பகுதியிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாத போதிலும் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் விடயத்திற்கு உரிய அனைத்து கடன் மீதிகளும் தீர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறே தீர்க்கப்படாதுள்ள மீதிகள் உள்ள கடன்பட்டோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உரிய நட்டங்களை அறவிடாமைக்கான காரணங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | சபையின் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ஆதன கடன்களுக்கு உரிய 114 உரித்துறுதிகளுக்காக இரத்துச் செய்ய முடியாத அற்றோனி அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய லொத்தர் சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள வீட்டுக் கடன்களுக்கு உரிய ஆதனங்கள் தேசிய லொத்தர் சபைக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளது. அந்த ஈட்டுப் பொறுப்புக்கள் (Mortgage bonds) 114 வழக்கறிஞர் மற்றும் நொத்தாரிஸ் மூலம் உரிய முறையில் எழுதி சான்றுப்படுத்தப்பட்டு குறித்த காணிகளை பதிவு செய்தல் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடனை பெற்றுக் கொண்ட நபர் கடனை செலுத்துவதனை புறக்கணித்தால் ஈட்டு பொறுப்பு வழக்கொன்றினை (Mortgage bond case) நீதிமன்றத்தில் தொடுத்து கடனை அறவிடும் இயலுமை காணப்படுகின்றது. அதனால் இரத்துச் செய்ய முடியாத அற்றோனி | இரத்துச் செய்ய முடியாத அற்றோணி அதிகாரத்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகாரத்தில் பெற்றுக் கொள்வதற்கு தேவை ஏற்படவில்லை. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது சபையினால் அச்சிடப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் தேவை உரிய முறையில் எதிர்வு கூறப்படாது அச்சிடல் கட்டளைகள் வழங்கப்பட்ட காரணத்தால் ஆண்டினுள் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களில் சுமார் 9 சதவீத அளவானது விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தது. | மீளாய்வாண்டினை கருத்தில் கொள்ளும் போது தேசிய லொத்தர் சபையினால் நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்கள் 1163 மில்லியன் அச்சிடப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 95 மில்லியன் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்களாக இனங்காணமுடியும். அது சதவீத அடிப்படையில் 8.19% ஆகும். நாளாந்த சீட்டிழுப்பின் போது மாவட்ட விற்பனை முகவரின் விற்பனை மற்றும் மீள கையளிக்கும் லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மாவட்ட விற்பனை முகவர் கட்டளை முகாமைத்துவம் மூலம் 2020 ஆம் ஆண்டின் முதற் காலப்பகுதியில் இந்த பெறுமதி 5% அளவிற்கு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான காரணங்களை இனங்கண்டுள்ள போதிலும், பொருத்தமான எதிர்வுகூறலின் அடிப்படையில் அச்சிடல் கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு ரூபா 6,110,000 பெறுமதியான மக்கள் அழைப்புக்களில் 650 இல் ரூபா 1,588,600 பெறுமதியான 169 மக்கள் அழைப்பு இயந்திரங்கள் 2020 யூன் 12 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. அந்த பண்டங்களின் தரம், நிலைத்திரு தன்மை மற்றும் முகவர்களுக்கு அவற்றின் தேவைப்பாடு போன்றன தொடர்பில் முறையான கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிராமை மற்றும் அவற்றின் உத்தரவாதக் காலமும் விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மக்கள் அழைப்பு கட்டமைப்பு அந்த தேவைப்பாடுகள் கள உத்தியோகத்தர்களின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. உரிய விற்பனை முகவர்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் பெறுகை நடைமுறையில் நிலவும் நடைமுறை சிக்கல்கள் காரணமாக உரிய காலத்தில் அந்த பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனினும், குறித்த பொருட்கள் கிடைத்த பின்னர் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்காக இந்த மக்கள் அழைப்பு கட்டமைப்புக்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் இதுவரையிலும் அவற்றுள் 169 மக்கள் அழைப்பு கட்டமைப்புக்கள் உள்ளன. தேவைக்கு பொருத்தமான முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | உள்ளபடியான தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு கொள்வனவு செய்ய வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள நானாவித வைப்புக்களுக்கு இடையே ரூபா 380,000 பெறுமதியுடைய வைப்புக்களுக்கு உரிய சேவைகளை பெற்றுக்கொள்ளல் நிறைவடைந்துள்ள போதிலும், அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2004 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 100,000 ஆன வைப்புத் தொகையினை அறவிடும் இயலுமை காணப்படவில்லை. கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நிதி அமைச்சிற்கு 2018.08.03 மற்றும் 2019.08.27 ஆகிய திகதிகளில் நிதி அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப் பட்டுள்ளமையால் உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.<br>மேலும், மகாத்மா நிகழ்ச்சிச் திட்டம் நடாத்தப்பட்ட ஹோட்டலுக்கு மேற்கொள்ளப்பட்ட இறுதிக் கொடுப்பனவின் போது ரூபா 200,000 ஆன முற்பணத் தொகை கழிக்கப்பட்டு செலுத்தப்பட்டுள்ளதுடன் கணக்கு வைக்கும் போது ஏற்பட்ட வழுவொன்றின் காரணமாக இவ்வாறான மீதியொன்று காண்பிக்கப்படுவதுடன் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 20,000 தொகையையும் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதிக்காது உரிய தீர்ப்பனவுகளை மேற்கொள்ளல். |
| (ஏ) | சபைக்கு முகவரின் இலத்திரனியல் அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும் விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்கள் தொடர்பிலான மின்னஞ்சல் தகவல்களை பேணும் கணனி மென்பொருளினுள் தவறுதலாக இரு தடவைகள் பற்றுச்சீட்டொன்று அச்சிடப்பட்டிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டது. அந்த தவறை திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்னஞ்சல் மூலம் கிடைக்கும் விற்பனை செய்யப்படாத “Process” செய்ததன் பின்னர் பற்றுச்சீட்டுக்களை வழங்குவதற்கு காண்பிக்கப்படுவதுடன் ஒரு நபரினால் குறித்த விற்பனை முகவரின் லொத்தர் சீட்டுக்களின் தொகுதி இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பற்றுச்சீட்டொன்று விநியோகிக்கப்பட்டதன் பின்னர் அது அந்த பட்டியலில் காண்பிக்கப்படாது மீண்டும் ஒரு தடவை கட்டமைப்பினுள் உள்ளடக்குவதற்கு முடியாத | நிலவும் கணினி மென்பொருளினை நாளதுவரையாக்குதல். |

வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தற்போது காணப்படும் கட்டமைப்பில் உள்ளதுடன் அதனை தன்னியக்க தரவு செயற்படுத்துனருக்கு அறிவிக்கும் தகவல் கட்டமைப்பின் மூலம் அந்த சந்தர்ப்பத்திலேயே அறிவிக்கப்படும். கணனி வலையமைப்பு கட்டமைப்பின் அதிக நெரிசல் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த பட்டியல்களை வழங்குவதற்காக லொத்தர் சீட்டுக்களின் தொகுதி இலக்கத்தினை தெரிவு செய்து பட்டியல் தரவுக் கட்டமைப்பில் “save” செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அது save (களஞ்சியம்) ஆவதற்கு முன்னர் மற்றுமொரு தரவு செயற்படுத்துனர் அதனை தெரிவு செய்தால் கணனி வலையமைப்பில் நிலவும் நெரிசல் காரணமாக தரவுக் கட்டமைப்பில் தன்னியக்கமாக நிலவும் அடைப்புக்கள் காரணமாக (Database Table Lock) இந்த தகவல் தரவு செயற்படுத்துனருக்கு தெரிந்து கொள்ள முடியாத சந்தர்ப்பம் நிலவுகின்றது. நிலவும் கட்டமைப்பினுள் இந்த வழுவிற்கு தீர்வொன்றினை வழங்க முடியாதுள்ளதுடன் (லொத்தர் முகாமைத்துவ கட்டமைப்பின் source code இல்லாதிருந்தமையால்) புதிய மென்பொருளொன்றை நிர்மாணிக்கும் போது இந்த Error handling மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிப்பதற்கு இதுவரையிலும் அடிப்படை பணிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | தேசிய லொத்தர் சபையில் விற்பனை முகவர்களை இணைத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் இணைத்துக் கொள்வதனை போன்றே அவர்களின் தகைமைகளை பரிசோதித்தல், | முகவர் பதவிக்கான கோரல் சபையின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குறித்த மாவட்டத்தின் வலைய முகாமையாளரின் எழுத்து மூல பரிந்துரையுடன் எடுக்கப்படும். பிரதி முகாமைத்துவ உத்தியோகத்தர், உதவி பொது | ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்றினை தயாரித்து இணைத்துக் கொள்ளுதல் இடம்பெறுவதும் செயலற்ற |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பார்வை, பதிவு, நிதி இயலுமைகளை தீர்மானித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவை தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. தற்போது காணப்படும் விற்பனை முகவர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்தி ஆட்சேர்ப்பதற்கு உரிய பணிகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதனைப் போன்றே செயலற்ற நிலையில் உள்ள முகவர்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை நடாத்தி சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த முகவர்களின் பிரதிநிதித்துவம் இரத்துச் செய்யப்பட்ட முகவர்கள் தொடர்பில் விளம்பரங்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் 20 ஆந் திகதி வரையிலும் 04 செயலற்ற முகவர்களின் கணக்குகளின் ஊடாக ஏனைய செயற்பாட்டில் உள்ள விற்பனை முகவர்களின் பணிகள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. | முகாமையாளர் (பிரதி முகாமைத்துவம்), உதவி பொது முகாமையாளர் (விற்பனை), ஆகியோரால் இந்த ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் மேலதிக பொது முகாமையாளர் ஊடாக தலைவருக்கு மீண்டும் முன்வைக்கப்பட்டு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு விற்பனை முகவருக்கு இலக்கமொன்று வழங்கப்படும். அனைத்து விற்பனை முகவர்களுக்கும் நாளொன்றிற்கு விற்பனை செய்ய வேண்டிய விற்பனை இலக்குகள் விற்பனை பிரிவினால் வழங்கப்படும். புதிய விற்பனை முகவர் பதவியை வழங்கிய பின்னர் அதன் செயல் முன்னேற்றம் விற்பனைப் பிரிவினால் அவதானிக்கப்படுவதுடன் விற்பனைப் பணிகளில் நலிவுகளைக் காண்பிக்கும் முகவர்களுக்காக அவர்களின் பிரதிநிதித்துவத்தை இரத்துச் செய்தல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | முகவர்களை துரிதமாக அகற்றுதலையும் மேற்கொள்ளல் |
| (ஒ) | தேசிய லொத்தர் சபையினால் விடயப் பொறுப்பு அமைச்சரின் அல்லது நிதி அமைச்சரின் இணக்கப்பாடு இன்றி லொத்தர் சீட்டுக்களுக்கான சந்தை தொடர்பில் கற்கையொன்றினை மேற்கொள்ளாது 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட டொலர் போர்ச்சூன் லொத்தர் சீட்டு 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சீட்டிழுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 30000 ஆக காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 09 ஆந் திகதியில் உள்ளபடியான விற்பனை செய்யப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 6027 ஆகும். மீண்டும் அத்திகதியில் | டொலர் போர்ச்சூன் லொத்தர் சீட்டின் வருமானத்தை கணிப்பிடும் போது வெகுமதித் தொகை ஐ.அ.டொலர் 100,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தரகுப் பணம் விற்பனை தொகையில் 15% ஆகும். நிதியமாக சீட்டிழுப்பு நிறைவடைந்து வருமான இலாப கணக்கொன்று தயாரிக்கப்பட்டு அதன் இலாபமொன்று காணப்பட்டால் அந்த பணம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்படும்.<br><br>அவ்வாறே, தற்போது எவ்வித வெளிவாரி தரப்பினரிடமும் லொத்தர் சீட்டுக்கள் காணப்படாததுடன் சபையின் ஊழியர்கள், வலைய முகாமையாளர்கள் மற்றும் விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களின் | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை போன்றே திறைசேரியின் அறிவுரைகளின் பிரகாரம் செயற்படல். |

களஞ்சியத்தில் மற்றும் கையிருப்பில் காணப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 21942 ஆகும். 2031 லொத்தர் சீட்டுக்கள் பல்வெறு தரப்பினருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களின் தகவல்கள் சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

கைவசம் உள்ள லொத்தர் சீட்டுக்கள் இன்னமும் சீட்டிழுப்புத் திகதி வெளியிடப்படாத காரணத்தினால் நேரடியாக அந்த லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவர்களிடமுள்ள லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கையானது அண்ணளவாக 982 ஆகும். லொத்தர் சீட்டிழுப்பின் திகதிகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த லொத்தர் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் விற்பனை செய்த லொத்தர் சீட்டுக்களை சீட்டிழுப்புக்கு உட்படுத்துதல் இடம்பெறும்.

(ஓ) தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டிழுப்புக்களில் கடமையில் ஈடுபடும் பதவியணியை இணைப்புச் செய்யும் போது 2019 மார்ச் 29 ஆந் திகதிய தே.லொ.ச/சுற்றறிக்கை/2019/02 சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் போது நன்னடத்தை காலப்பகுதிக்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்படும் எல்லைகளை விஞ்சி இணைப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் உதவி பொது முகாமையாளர்கள் இருவர் மற்றும் ஒரு உத்தியோகத்தரால் 165 நாட்களுக்காக லொத்தர் கொடுப்பனவுகளாக ரூபா 1,452,000 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. வெற்றிடமான பதவியொன்றை நிரப்பியதன் பின்னரும் அந்த பதவியை வெற்றிடமாக கருதி 19 நாட்களுக்கு மீண்டும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 167,200 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உதவி பொது முகாமையாளர் (பிரதி முகாமைத்துவம்) பதவியில் பதில் கடமையாற்றும் உதவி பொது முகாமையாளர் (விற்பனை) இனால் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த வெற்றிடம் 2019.09.02 ஆந் திகதி நிரப்பப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், செப்தெம்பர் மாதம் பதவியணிக்கு உதவி பொது முகாமையாளர் (பிரதி முகாமைத்துவம்) உள்ளடக்கப்பட்டிராததுடன் உதவி பொது முகாமையாளர் (விற்பனை) இனால் 12 நாட்கள் சீட்டிழுப்பு கடமைகளில் பங்குபற்றியுள்ளார். அந்த காலப்பகுதியினுள் உதவி பொது முகாமையாளர் (விற்பனை) பணிச் சுழற்சியின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை தொடர்பிலான விபரம் பின்வருமாறு.

| மாதம் | கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | கூடுதலாக கொடுப்பனவு செலுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| செப்தெம்பர் | 12 | 4 |
| ஒக்தோபர் | 12 | 4 |
| நவம்பர் | 12 | 4 |
| திசெம்பர் | 11 | 3 |
| மொத்தம் | | 15 |

அதன் பிரகாரம் திசெம்பர் மாதம் கூடுதலாக 04 நாட்களுக்கு கொடுப்பனவு

திறைசேரியின் சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் செயற்படல்.

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் மாதம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது 03 தினங்களுக்கு மாத்திரம் ஆகும். அவ்வாறே சனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய மாதங்களில் பணிச் சுழற்சியின் பிரகாரம் 9 நாட்கள் படி வழங்கப்பட்டிருந்த போதிலும், 8 நாட்கள் படியாகவே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பணிச்சுழற்சியின் அடிப்படையின் ஊடாக சேவையில் ஈடுபடுத்தி நிறுவனத்தினால் அவர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அவர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது 8 நாட்கள் படி மாத்திரமே. | |
| (ஔ) | தேசிய லொத்தர் சபையின் 2015 முதல் 2019 வரையான காலப்பகுதிகளுக்கு உரிய பணிகளில் ஈடுபட்ட பணிப்பாளர் சபை மற்றும் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட ரூபா 922,000 பெறுமதியான பொருட் பதிவேட்டு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்ட பொருட்கள் (கைத்தொலைபேசிகள், I-pad, Mack Book) ஆகியவற்றை 2020 யூன் 09 ஆந் திகதியளவில் மீளக்கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அவர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 582,356 ஆன தொகையும் நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொருட்களை கையளிக்குமாறு 2020 சனவரி 16 ஆந் திகதிய கடிதத்தில் குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முன்னாள் தலைவர், செயற்பாட்டு இயக்குனர் மற்றும் மேலதிக பொது முகாமையாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பொருட்களுக்கு பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டதன் பின்னரான பெறுமதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட பொருட்களை மீள பொறுப்பேற்பதற்கு அல்லது குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணியின் உரித்தினை சட்டரீதியாக முழுமையான ஒப்படைக்கப்பட்டிருக்காத போது சபையினால் அதன் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 624,780 ஆன வீடமைப்புக் கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் 2017 யூன் 17 ஆந் திகதி சேவையை கைவிட்டுச் சென்றுள்ளார். எனினும் உரிய ஆதனங்களின் உரித்தினை மீளகோரி அந்த தரப்பினரால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அதன் ஒரு தரப்பாக சபை பெயரிடப்பட்டிருந்தது. சபையில் தொழில்சார் தகைமையுள்ள சட்டத்தரணியொருவர் உள்ளபோது இந்த வழக்கின் 13 வழக்குத் தொடர்களுக்காக சபையினால் ரூபா 313,825 தொகை செலுத்தி வெளி சட்டத்தரணி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 2075/L ஆம் இலக்க வழக்கில் தேசிய லொத்தர் சபை அதன் தரப்பினராக ஆக்கப்பட்டிருந்த அந்த ஆதனம் குறித்த உத்தியோகத்தரினால் தேசிய லொத்தர் சபையில் ஈடுவைக்கப் பட்டிருந்ததாகும். அந்த வழக்கு நிறைவடைந்தவுடன் அந்த உத்தியோகத்தரின் சார்பாக அந்த வழக்கின் தீர்ப்பு அளிக்கப்பட்டது. குறித்த ஆதனத்தின் உரித்து சட்டரீதியாக அந்த உத்தியோகத்தரை சாரும் என தீர்ப்பளிக்கப்பட்டது. | தாமதமின்றி குறித்த நட்டத்தினை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது முகவர்களுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு விற்பனை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,859,585 பெறுமதியான உடனடி லொத்தர் சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது மீள அனுப்பப்பட்டிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த விற்பனை அடிப்படையில் பதவியணிக்கு மற்றும் முகவர்களுக்கு ரூபா 35,813,250 ஆன ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லொத்தர் சீட்டுக்களில் உரிய கடன் தொகையை செலுத்தலை தாமதித்த மற்றும் உரிய முறையில் செலுத்தாத மாவட்ட பிரதிநிதிகளுக்கு பின்னர் வழங்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் ஒரு பகுதி மீண்டும் தலைமை அலுவலகத்திற்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணினி கட்டமைப்பின் பிரகாரம் உடனடி லொத்தர் சீட்டுக்களை மீளளிப்புக்களாக கணக்கு வைப்பதற்கு இயலுமை இல்லாதிருந்தமையால் அவற்றை பொருத்தமான முறையில் பதிவு செய்து ஏனைய மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் | செலுத்தப்பட்டுள்ள ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மீள சீராக்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனத்தின் நடமாடும் விளம்பர பிரசார பிரிவின் ஊடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன் அந்த நிலைமை காரணமாக இது தொடர்பில் மீண்டும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வில்லை. | |
| (இ) | 2018 மார்ச் 07 ஆந் திகதி கண்டி மாவட்டத்தில் நிலவிய கலவரத்தின் அடிப்படையில் அந்த மாவட்டத்தின் பிரதிநிதிகளுக்கு 04 சீட்டிழுப்புக்களுக்காக மொத்த லொத்தர் சீட்டுக்கள் 264,000 தொகையும் விற்பனை செய்யாததாக கருதி உரிய சீட்டுழுப்புக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அந்த முகவர்களினால் அதுவரையும் விற்பனை செய்யப்பட்டிருந்த அனைத்து லொத்தர் சீட்டுக்களும் உள்ளடங்கலாக அனைத்து டிக்கட்டுக்களும் இரத்துச் செய்வதற்கு உள்ளானமை தொடர்பில் நிதி அமைச்சின் அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | நுகர்வோர் மற்றும் விற்பனை வலையமைப்பிற்கு நேரும் நட்டங்களை குறைக்கும் வகையில் பொருத்தமான வியாபார தீர்மானமொன்றாக இந்த தீர்மானம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதுடன் வியாபாரத் தீர்மானமொன்றை எடுக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு உள்ளமையால் இது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல் தேவையற்றது என்பது முகாமைத்துவத்தின் கருத்தாகும். | நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெற்ற கொவிசெத 1896 ஆவது சீட்டிப்பின் போது விற்பனை செய்யப்படாத லொத்தர் சீட்டுக்கள் 8,000 எண்ணிக்கையானவை 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி லொத்தர் சபையின் களஞ்சியப் பிரிவிற்கு உரியமாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கையளிக்கப்பட்டுள்ள போதுஅதற்கான பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்காமல் அந்த அளவிலான விற்பனையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக விற்பனை முகவருக்கு மீள செலுத்த | இது தொடர்பில் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு இனங்காணப்பட்ட தரப்பினருக்கு அவர்களின் பொறுப்பு நிறைவேற்றப்படாமை மற்றும் தவறுதல்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | லொத்தர் சீட்டுக்களை பொறுப்பேற்றதல் தொடர்பிலான நடைமுறையை மாற்றியமைத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய தொகை தொடர்பில் மற்றும் உரிய கடமைகளை நிறைவேற்றாமைக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெறுவதற்கு நிமித்தமாக இருந்த தனநிதானய இன் 55 ஆவது சீட்டிழுப்பின் 900 லொத்தர் சீட்டுக்கள் மற்றும் மெகா பவர் 285 ஆவது சீட்டிழுப்பின் 500 லொத்தர் சீட்டுக்கள் உரிய மாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கொண்டு செல்லும் போது காணாமல் போனமை காரணத்தினால் அந்த லொத்தர் சீட்டுக்கள் அனைத்தும் உரிய சீட்டிழுப்பின் போது விற்பனை செய்யப்படாதவையாக கருதி அகற்றுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. எனினும் அது தொடர்பில் உரிய பரிசோதனை ஒன்று மேற்கொண்டு உரிய நட்டத்தினை கணிப்பிட்டு கணக்கு வைத்தல் இடம்பெறவில்லை. | முகாமைத்துவத்தினால் பணிப்பாளர் சபையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் இந்த லொத்தர் சீட்டுக்கள் 02 இன் உரிய பண்டக் குறியீட்டு வீச்சில் உள்ளடங்கிய லொத்தர்களின் எண்ணிக்கையில் 2018.09.28 ஆந் திகதி சீட்டிழுப்புக்கு நிமித்தமாக உள்ளவை தொடர்பில் லொத்தர் சீட்டிழுப்பிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் ஹங்குரங்கெத்த பொலிஸ் பிரிவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | லொத்தர் சீட்டுக்கள் காணாமல் போதல் மற்றும் தொலைந்து போதல் தொடர்பில் முறையான நடைமுறை யொன்றை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல் |
| (ஊ) | 2000 ஆகஸ்ட் 23 ஆந் திகதி முதல் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள சபை ஆதனக் கடன் பெற்ற உத்தியோகத்தரொருவரின் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 340,275 ஆக இருந்தது. அந்த கடனை அறவிடுவதற்கு 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த உத்தியோகத்தரிட மிருந்து குறித்த கடன் தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கடனை அறவிடுதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | வடமேல் மாகாணத்தின் 2019 மே 13 மற்றும் 14 ஆகிய தினங்களில் காணப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக பிரதிநிதிகளின் வசமிருந்த | 2019 மே 13, 14 ஆந் திகதிகளில் வடமேல் மாகாணத்தில் நிலவிய ஊரடங்கு சட்டத்தின் கீழ் லொத்தர் சீட்டிழுப்புக்கள் | தீர்மானம் எடுக்கும் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினைப் |

| | | |
|---|---|---|
| விற்பனை செய்யப்படாத அனைத்து லொத்தர் சீட்டுக்களும் சபையினாலேயே கொள்வனவு செய்வதற்கும் அதன் வெகுமதி சபையின் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளலும் இடம்பெற்றிருந்ததுடன் இதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்பில் நுகர்வோர் மற்றும் விற்பனை வலையமைப்பிற்கு ஏற்படும் சேதத்தினை குறைத்துக் கொள்ளும் விதத்தில் பொருத்தமான வியாபார தீர்மானமொன்றாக இத்தீர்மானம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ளல். |

**3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரத்திற்காக சபையினால் தொடர்ந்தும் ரூபா 329,693 தொகையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அதனை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | இந்த இயந்திரத்தினை முழுமையாக செயற்படுத்தும் இயலுமை உள்ளது. இந்த இயந்திரத்தின் கட்டுப்பாட் புகுதி 8 வருட காலமாக மஹஜன சம்பத சீட்டிழுப்பு இயந்திரத்தில் செயலற்று காணப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைக்காக பதிலீட்டு தொகுதியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்த கட்டமைப்பே பயன்படுத்தப்படுகின்றது. லொத்தர் சபையின் புதிய தேவைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட்டு புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக பெறுகைகள் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். |

**3.7 பெறுகைகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் சந்தைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உடனடி லொத்தர் சீட்டுக்களின் இரண்டு வகையின் அச்சிடல் பணிக்காக பெறுகையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அச்சீட்டாளருக்கு அந்த பெறுகையினை | உடனடி லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட புதிய அச்சீட்டாளருக்கு சிலோன் பிஸ்னஸ் அப்லையன்ஸ் நிறுவனத்திற்கு உடனடி லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் ஒப்பந்தத்தினை கையளித்தல் 2020.02.12 ஆந் | பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக பணிகளை தீர்மானித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | கையளித்தல் 2020 பெப்ரவரி 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், குறித்த அச்சீட்டாளரின் வசம் உரிய அச்சீட்டுப் பொருட்கள் இல்லாதிருந்த காரணத்தால் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும்உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன் அதன் அச்சீட்டுப் பணிகள் பழைய அச்சீட்டாளரின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திகதி மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அந்த நிறுவனத்தினால் 2020.05.01 ஆந் திகதி முதல் அச்சீட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், 2020 மார்ச் மாத இறுதிப் பகுதியில் உலகமெங்கிலும் பரவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்த அச்சீட்டாளரால் கட்டளையிடப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் அச்சீட்டு உதிரிப்பாகங்களை உரிய காலப்பகுதியினுள் இறக்குமதி செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த மூலப்பொருட்கள் கிடைக்கும் வரையில் தற்காலிக அடிப்படையில் மிகவும் குறுகிய காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அளவிடைகளுக்கு புறம்பாக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அச்சீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் அமைச்சின் பெறுகைகள் குழுவின் அனுமதியுடன் 2020.06.16 ஆந் திகதி முதல் உடனடி லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,400,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 500 சூரிய திரைகளில் 2020 யூன் 16 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,212,426 பெறுமதியான 267 சூரிய திரைகளின் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்த பெறுகையின் போது இருப்புக்களின் தேவைப்பாடு போன்றே நலனாளிகளும் இனங்காணப்பட்டிருக்காததுடன், அவற்றின் உத்தரவாதன் காலமும் | பெறுகைகள் நடைமுறையில் நிலவும் நடைமுறை சிக்கல்கள் காரணமாக உரிய காலப்பகுதிகளில் அந்த பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனினும், குறித்த பொருட்கள் கிடைத்த பின்னர் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்காக இந்த சூரிய வலு கட்டமைப்பினை வழங்குதல் இடம்பெற்றதுடன் இதுவரையிலும் அதிலிருந்து 150 சூரிய வலு கட்டமைப்புக்கள் மாத்திரம் களஞ்சியத்தில் எஞ்சிக் காணப்படுவதுடன் அந்த | குறித்த பொருட்களை பயன் படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்திலேயே நிறைவடைந்திருந்தது. | அளவும் இனங்காணப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் பொருத்தமானவாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (இ) | 2019 ஆம் ஆண்டின் போது சபையினால் மேம்படுத்தல் உருப்படிகளின் 41 வகைகளுக்காக ரூபா 168,511,500 ஆன தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருடத்தினுள் பெறுகை நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது 12 உருப்படிகளுக்காக மாத்திரம் இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 50,986,500 ஆகும். | மேம்படுத்தல் உருப்படிகள் 31 கொள்வனவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், ஆண்டினுள் 15 உருப்படிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், தேவைப்பாட்டின் அடிப்படையில் அதாவது போட்டி நிறுவனத்தின் போட்டி நிகழ்ச்சித்திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு அத்தியவசிய பொருட்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிட வேண்டியமை. |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 13,128,900 பெறுமதியான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை கூடாரங்கள் 300 இனை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு 2019 பெப்ரவரி மாதம் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 10 ஆந் திகதி வரையிலும் 51 விற்பனை கூடாரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும், விநியோகிப்பதற்கு உள்ள விற்பனை கூடாரங்களை வழங்காத காரணத்தால் குறித்த வழங்குனரிடமிருந்து அதற்காக தாமதக் கட்டணமாக ரூபா 847,689 தொகை வைக்கப்பட்டு பிணை முறியான ரூபா 1,509,823 தொகையும் அவரிடமிருந்து அறவிடப்பட்டு அந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதற்காக புதிய பெறுகை பணிகள் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த விற்பனை கூடாரங்களை விநியோகிக்காத காரணத்தால் குறித்த வழங்குனரிடமிருந்து தாமதக் கட்டணமாக ரூபா 847,689.00 தொகையும் செயலாற்றல் பிணை முறியாக ரூபா 1,509,823.00 தொகையும் அறவிடப்பட்டுள்ளது. பெறுகை பணிகள் மீளவும் 2020 யூலை மாதம் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | பெறுகை நடைமுறையை மீள மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | 2016 யூலை மாதத்தின் | செவன மற்றும் தனநிதானய | பெறுகை |

| | | | |
|---|---|---|---|
| | போது மற்றும் 2018 மே மாதங்களில் ஆரம்பிக்கப்பட்ட செவன மற்றும் தனநிதானய ஆகிய 02 லொத்தர்களின் அச்சிடல் நடவடிக்கைகள் பெறுகையொன்றின் படி அல்லாது அச்சீட்டாளர் இருவருக்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சபையினால் மீளாய்வாண்டின் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த 10 வகையான லொத்தர்களில் 04 சீட்டுகளுக்காக முறையான பெறுகைக் காலம் 2019 ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்திருந்த போதிலும், புதிய பெறுகை பணிகள் 2020 யூன் 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் ஏனைய 06 லொத்தர் வகைகளுக்காக முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது அச்சீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | லொத்தர் சீட்டுக்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும் போது அப்போது நிலவிய அவசர தேவைப்பாடு காரணமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொருத்தமான வழங்குனர் ஒருவரை தெரிவு செய்யும் வரையிலும் தற்காலிக அடிப்படையில் அச்சீட்டுப் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன. அனைத்து லொத்தர் சீட்டுக்களுக்கும் ஒரு தடவையில் பெறுகை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அமைச்சின் பெறுகைகள் குழுவினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பெறுகை நடைமுறையை பின்பற்றுதல் தொடர்பில் நிலவிய நடைமுறைச் சிக்கல் காரணமாக மீண்டும் 2020 மே மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையிலான ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் புதிய அச்சீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | நடவடிக்கைகள் உரிய காலப்பகுதியில் திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்படல். |
| (ஊ) | சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2008 ஆம் ஆண்டு முதலம் நீரோகா லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2015 ஆம் ஆண்டு முதலுலம் மெகா பவர் லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு பணிகள் 2018 ஆம் ஆண்டு முதலும் அரச அச்சீட்டு கூட்டுத்தாபனத்தினால் இதுவரையிலும் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக | மகாஜன சம்பத லொத்தர் சீட்டின் அச்சீட்டுப் பணிகள் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச அச்சக கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அச்சீட்டு ஒப்பந்தம் 2020.07.06 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அரச நிறுவனம் ஒன்றினால் அச்சிடப்படுகின்ற காரணத்தினால் அச்சீட்டுக் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. | பொருளாதார ரீதியில் நலனான வகையில் அச்சீட்டு விலைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | எழுத்து மூல உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. பெறுகை நடைமுறையின் மூலம் ஒரு டிக்கட்டினை அச்சிடுவதற்காக ஆகக்குறைந்த விலை ரூபா 0.3448 ஆன போதிலும், அரச அச்சீட்டு கூட்டுத்தாபனத்திற்கு ஒரு மஹாஜன சம்பத சீட்டினை அச்சிடுவதற்கு ரூபா 0.50231 ஆன கிரயமும், மகாஜன சம்பத, நீரோகா மற்றும் மெகா பவர் ஆகிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுக் கிரயம் ரூபா 0.50231 செலுத்தப்பட்டவாறு காணப்பட்டது. போட்டி அடிப்படையிலான விலைகளை கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டினுள் மாத்திரம் மகாஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுக்களின் மூலம் மதிப்பிடப்பட்ட நட்டமானது ரூபா 52,396,404 மற்றும் நீரோகா லொத்தர் சீட்டின் மதிப்பிடப்பட்ட அச்சீட்டு நட்டமானது ரூபா 8,709,206 ஆகவும், மெகா பவர் லொத்தரின் அச்சீட்டின் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 21,529,523 ஆகவும் காணப்பட்டது. | எனினும், விலையினை திருத்துவதற்காக எதிர்காலத்தில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒரே தடவையில் பெறுகை நடைமுறையை ஆரம்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது பெறுகை பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. | |
| (எ) | 2018 ஆம் ஆண்டின் போது கணனிமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல் தொடர்பிலான அமைப்புக் குறிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணான வகையில் குறைந்த கிரயமுடைய கடதாசியினை பயன்படுத்தல், உரிய நியமங்கள் பாதுகாக்கப்படாத வகையில் அச்சீட்டு பணிகளை மேற்கொள்ளல் மற்றும் இரட்டை லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் போது ஏற்படும் | லொத்தர் சீட்டுக்களுக்குரிய விலைக்கேள்வி கோரலின் போது அமைப்புக் குறிப்பீடுகளுக்கு புறம்பான வகையில் லொத்தர் சீட்டுக்களின் அளவு குறைக்கப்பட்டு அச்சிடுதல் தொடர்பில் அந்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சீட்டாளரினால் குறித்த அளவு தொடர்பான அமைப்புக் குறிப்பீடுகளுக்கு புறம்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கிரய சேமிப்பாக கணக்காய்வு பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் | உரிய நியமங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு எல்லா சந்தர்ப்பத்திலும் முயற்சி செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | குறைபாடுகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக 2019 சனவரி 13 ஆந் திகதி நடைபெற்ற கொவிசெத சீட்டிழுப்பிற்காக குறித்த அச்சீட்டாளரினால் 30 லொத்தர் சீட்டுக்கள் இரு தடவை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டமை மற்றும் மேலுமொரு அச்சீட்டாளரினால் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு அச்சிடப்பட்டமையால் ரூபா 9,472 ஆன மேலதிக இலாபமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி அவர்களுக்கு செலுத்துவதற்கு உரிய அச்சீட்டுக் கட்டணத்திற்கு கழிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு குறித்த லொத்தர் சீட்டுக்களின் தொகுதி இலக்கங்கள், திகதி, இலக்கம், அச்சீட்டு இலக்கம் ஆகியவை தொடர்பில் பரிசோதனையொன்று மேற்கொண்டு அவற்றின் சரியான தன்மை தொடர்பில் தரச்சான்றிதழொன்று சீட்டிழுப்பின் போது குறித்த அச்சீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் போது ஏற்படும் அனைத்து குறைபாடுகள் தொடர்பிலும் அச்சீட்டாளரிடம் நட்டஈட்டினை அறவிடக்கூடிய வகையில் ஒரு பந்தியை அச்சீட்டு உடன்படிக்கையில் உட்படுத்தலும் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அச்சகத்தில் தவறுதலாக லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டால் அது தொடர்பில் விரிவான அறிக்கையொன்று அனைத்து லொத்தர் சீட்டிழுப்புக்களுக்கும் அச்சீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | சபையினால் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வோரின் பாதுகாப்புக்கு அனைத்து தரவுகளும் QR Code ஒன்றிற்கு உள்ளடக்கப்பட்டு அச்சிடுமாறு அச்சீட்டாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த அச்சீட்டாளர்களினால் அந்த பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றும் போது தவறான | நுகர்வோரின் பாதுகாப்பிற்காக உண்மையான லொத்தர் சீட்டுக்களின் இனங்காணலை இலகுபடுத்தலும் அதன் மூலம் எதிர்காலத்தில் லொத்தர் சீட்டிழுப்பு வெற்றி தொடர்பில் நுகர்வோருக்கு தன்னியக்க வலைத்தளத்தின் ஊடாக லொத்தர் சீட்டிழுப்புக்களை மெய்மையாய்வு செய்வதற்கும் QR Code லொத்தர் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே QR Code | அறிமுகப்படுத்தப் பட்ட பாதுகாப்பு நடைமுறையை பின்பற்ற நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | QR Code அச்சிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அந்த நடைமுறையை பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படும் உபகரணமும் சபையிடம் காணப்படவில்லை. அவ்வாறே வெற்றியாளர்களால் முன் வைக்கப்படும் லொத்தர் சீட்டுக்களுக்கும் அந்த பரிசோதனை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பரிசோதனை முழுமையாக பொதுமக்களுக்காக எவ்வித விசேட உபகரணத்தையும் பயன்படுத்தாது ஸ்மார்ட் தொலைபேசியின் உதவியுடன் இலவசமாக தரவிறக்கம் செய்யக்கூடிய மென்பொருளிளை பயன்படுத்தி எளிதாக மேற்கொள்ள முடியும். அதற்காக விசேடமான உபகரணமொன்று தேவைப்படாது. எனவே இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் சபையில் எதிர்பார்க்கப்பட்டுள்ள பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளாமை மிகவும் வெற்றிகரமான பெறுபேறு கிடைத்துள்ளதுடன் அதன் இரண்டாவது கட்டத்தினை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. | |
| (ஐ) | 2018 ஆம் ஆண்டின் போது சபையினால் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட 26,000 வர்க்க அடிகள் பரப்பளவான கட்டிடத்திற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மாதாந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,750,000 ஆன போதிலும், அதற்காக செலுத்தப்படும் மாதாந்த வாடகையின் பெறுமதி ரூபா 7,677,173 ஆகும். அதனுடன் இணைந்ததாக இரும்பு தூண்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட 4,885 வர்க்க அடிகள் பரப்பளவுடைய கட்டிடமொன்று 1,099,125 மாதாந்த வாடகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்திற்கான திட்டம், வதிவதற்கு பொருத்தமானது என்பதற்கான சான்றிதழ், நகர சபையின் அனுமதி மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு | இந்த கட்டிடத்தின் வர்க்க அடியொன்றுக்கு பெறுமதி சேர் வரி நீங்கலான தொகையான அடியொன்றிற்கு ரூபா 270 ஆன வாடகை பெறுமதிக்கு அல்லது மாதாந்தம் ரூபா 7,677,173 தொகைக்கு மற்றும் இந்த கட்டிடத்தின் பின்பகுதியுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்ட 2,880 வர்க்க அடிகள் பரப்புடைய கட்டிடம் ஆகியவற்றை வாடகை அடிப்படையில் 2 வருடங்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் பெறுகைகள் குழு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கட்டிட திட்டம் மற்றும் வதிவதற்கு பொருத்தமானது என்பதற்கான சான்றிதழ் (OC) பெற்றுக் கொள்வதற்காக கட்டிட உரிமையாளருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வாடகை விகிதங்கள் உடன்படிக்கை கைச்சாத்திடு வதற்கு உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிட மொன்றினை வாடகைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தலின் அடிப்படையில் குறித்த கட்டணங்களை செலுத்துதல். |

பெறுமதி ஆகியவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொளளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு இன்றி சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிதி உத்தியோகத்தர் பதவியை கீழிறக்கி விற்பனை / மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டவட்டமான தகைமைகள் குறிப்பிடப்பட்டிராது முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றினை வகிக்கும் ஒருவர் அந்த பதவிக்கு 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் சம்பள படி நிலை 03 பிற்போடுமாறு கட்டளையிடப்பட்டுள்ள போது அவ்வாறு செயற்படாது புதிய பதவிக்குரிய சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | பழைய ஊழியர்களை உள்ளீர்க்கும் நோக்கினை முன்கொண்டு மற்றும் நிறுவனத்தின் கடமை தேவைப்பாட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று தற்காலிகமாக பதவிப் பெயர் மாற்றப்பட்டு அந்த பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல். |
| (ஆ) | உதவி பொது முகாமையாளர் விற்பனை மேம்படுத்தல் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் உதவி பொது முகாமையாளர் கடன் அறவிடல் பதவிக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தார். எனினும், உதவி பொது முகாமையாளர் கடன் அறவீடு எனும் பதவியொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் | இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் நிறுவனக் கட்டமைப்பின் பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்தல் இடம்பெறவில்லை. அதனால் அவரின் பதவி இழக்கப்படுதல் அல்லது அதற்கான நலன்கள் இழக்கப்படுதல் இடம்பெற்றிருக்க வில்லை என்பதுடன் இங்கு புதிய கடமை கையளிப்பு மற்றும் | தகைமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ள பணிக்காக கடமைகளை கையளித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த பதவிக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் நிரந்தர பதவியில் கடமை மேவுகையொன்று இடம்பெற்றிருக்கவில்லை. அங்கீகரிக்கப்படாத அந்த பதவிக்கு முறையான கடமைகள் மற்றும் பணிக் கையளிப்பு மேற்கொள்ளப்படாது அவருக்கு சம்பளம் மற்றும் படிகளாக 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,438,805 செலுத்தப்பட்டிருந்தது. | பதவியின் பெயரிலான மாற்றமொன்று மாத்திரமே இடம்பெற்றுள்ளது. | |
| (இ) | உடன்படிக்கை கைச்சாத்திடாது முறையான பணிக் கையளிப்பினை மேற்கொள்ளாது நிலவும் கணனி கட்டமைப்பில் உள்ள சிக்கல்களை இனங்காணல், திருத்துதல் மற்றும் புதிய முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றுக்காக 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் பணி உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மீண்டும் அந்த பணியை நிறைவேற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது சபையின் அங்கீகரிக்கப்பட்ட செயல்வழிக் கோவைக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கத்தவரின் பரிந்துரையின் அடிப்படையில் மதியுரையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த பணிக்காக அவருக்கு அடிப்படையாக ரூபா 350,000 தொகையும் பின்னர் இரண்டாம் கட்டத்திற்கு கீழ் ரூபா 250,000 எனும் படியாக ரூபா 1,364,948 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரதி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வரையில் 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆலோசகர்களுக்கு மாதாந்தம் ரூபா 80,842 படி கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. எனினும், இந்த ஆலோசகருக்கு ரூபா 350,000 ஆன தொகை மற்றும் மாதாந்தம் ரூபா 250,000 ஆன தொகையினை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் அது நிதி அமைச்சின் மாதாந்த கொடுப்பனவு எல்லையினை குறிப்பிடுவதற்கு முன்னர் இடம்பெற்ற கொடுப்பனவாகும். | உரிய பணிக் கையளிப்பினை மேற்கொண்டு குறித்த பணிகளை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| சபையினால் பின்னர் மதியுரையாளர் பதவியொன்றிற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. நிதி அமைச்சினால் மாதாந்தம் ரூபா 80,842 செலுத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் மேற்படி ஆட்சேர்ப்பின் அடிப்படையில் சிக்கனமற்ற முறையில் மாதமொன்றிற்கு செலுத்திய தொகை ரூபா 1,014,948 ஆகும். | | |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து அதற்கடுத்த வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 12 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய லொத்தர் சபை மார்ச் மாதம் 10 ஆந் திகதியளவில் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கையொப்பத்திற்காக பணிப்பாளர் சபையின் பத்திரம் மார்ச் மாதம் 13 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டபோதிலும். அப்போது நாடெங்கிலும் பரவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அரசினால் விடுமுறையொன்று அறிவிக்கப்பட்டமை மற்றும் அதன் பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை ஆகிய காரணங்களால் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அனுமதியினை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மே மாதம் 12 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

## 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்திருந்த போதிலும், நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குரிய முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய லொத்தர் சபைக்காக 55/57 ஆம் இலக்க பொக்சேல் குறுக்கு வீதி, கொழும்பு - 02 எனும் இடத்தில் 112 பேர்ச் பரப்பளவான காணியொன்று 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை கொள்வனவு செய்வதற்கான இலக்கானது தேசிய லொத்தர் சபைக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய சேவை நிலையமொன்றை நிர்மாணிப்பது ஆகும். அதற்கான உரிய அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்ட போதிலும், அரசின் கொள்கையான அரச நிறுவனங்களுக்கு புதிய கட்டடிடங்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்காமை காரணமாக அந்த பணியை முன்னெடுக்க முடியாதுள்ளது. | நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் என்ன என்பது தொடர்பில் இனங்கண்டு அவற்றை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்திக்கான வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்திக்கான வழிகாட்டியொன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | மனிதவள அபிவிருத்தி தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்தல். |
| (இ) சபையின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய லொத்தர் சீட்டு வருமானம் மற்றும் விளம்பர செலவினம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சீட்டிழுப்பு இடம்பெற்ற சம்பத் ரேகா மற்றும் சுப்பிரி திலக்சபதி ஆகிய 02 வகையான லொத்தர் சீட்டுக்களை சந்தைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டு அதற்காக | |

| | | | |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் 07 லொத்தர் சீட்டுக்களின் வருமானம் அதிகரித்திருந்த போதிலும், 05 லொத்தர் சீட்டுக்களின் வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் ஒட்டுமொத்த வருமானம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 1,641 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அது சதவீதமாக 8.03 சதவீதம் ஆகும். | தனநிதானய எனும் பெயரில் வாரமொன்றிற்கு மூன்று தடவைகள் சீட்டிழுப்பு இடம்பெறும் வகையில் லொத்தர் சீட்டொன்று சந்தைக்கு விடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டினுள் நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் 09 லொத்தர் சீட்டுக்கள் மாத்திரம் சந்தையில் விடப்பட்டன. 2018 ஆம் ஆண்டினுள் சம்பத் ரேகா, சுப்பிரி திலக்சபதி மற்றும் தனநிதானய ஆகிய மூன்று லொத்தர் சீட்டுக்களினதும் வருமானம் மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் தனநிதானய மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஆகியவற்றை ஒப்பிடும் போது ரூபா 71 மில்லியனால் விற்பனை வருமானம் அதிகரித்துள்ளது. அதற்கு மேலதிகமாக கொவிசெத, ஜாதிக சம்பத, மகாஜன சம்பத, மெகா பவர் மற்றும் வாசனா சம்பத ஆகிய 5 லொத்தர் சீட்டுக்களின் விற்பனையில் அதிகரிப்பொன்றினை அவதானிக்க முடியாதிருந்தது.<br><br>நீரோகா மற்றும் செவன ஆகிய இரு லொத்தர் சீட்டுக்களை கருத்தில் கொள்ளும் போது முறையே 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டினுள் 99.57% மற்றும் 99.25% ஆக விற்பனை வருமானம் உழைக்கப்பட்டுள்ளதுடன், இரு லொத்தர்களினதும் நாளாந்த சராசரி விற்பனையில் சிறிய அதிகரிப்புடன் பேணிச் செல்லப்பட்டுள்ளது. மேலும், குறித்த இரு லொத்தர் சீட்டுக்களின் வருமானத்தில் இந்த சிறு வீழ்ச்சிக்கான காரணமாக 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட சீட்டிழுப்புத் தடவைகள் குறைவடைந்தமையே இனங்காண முடியும். 2018 | பொருத்தமான கற்கையொன்றின் பின்னர் லொத்தர் சீட்டுக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் நிறுத்துதல். |

ஆம் ஆண்டினுள் 153 நீரோகா சீட்டிழுப்புக்கள் இடம்பெற்றிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டினுள் 151 சீட்டிழுப்புக்கள் மாத்திரம் இடம்பெற்றிருந்தன. அதற்கு மேலதிகமாக 52 செவன சீட்டிழுப்பு தடவைகள் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையானது 51 ஆகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது 2019 ஆம் ஆண்டினுள் 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,763 மில்லியன் விற்பனை வருமானம் பெறப்பட்டுள்ளதுடன் அது சதவீதமாக 8.99% ஆகும். மேலும் நாளாந்தம் சீட்டிழுப்புக்கள் இடம்பெற்ற 06 லொத்தர் வகைகளின் விற்பனை வருமானத்தில் அதிகரிப்பினை கைப்பற்றியிருந்ததுடன் இரு லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானத்தில் சிறிய அளவிலான வீழ்ச்சியொன்று காணப்பட்ட போதிலும், சராசரி விற்பனையில் சிறிய அளவிலான அதிகரிப்புடன் காணப்பட்டமையை அவதானிக்க முடியும். சுப்பிரி வாசனா லொத்தர் சீட்டு மாத்திரம் மீளாய்வாண்டினுள் விற்பனை வருமானத்தில் கருத்தில் கொள்ளக் கூடிய வீழ்ச்சியினை பெற்றிருந்தது. இந்த அவதாளிப்புக்களின் அடிப்படையில் 2020 யூன் மாதமளவில் வெகுமதி வழங்கும் சுழற்சியில் மாற்றத்துடன் நுகர்வோர் கவர்ச்சி தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் வகையில் மீள ஆரம்பித்தல் இடம்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது சுப்பிரிவாசனா, நீரோகா | வாரமொன்றிற்கு 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சீட்டிழுக்கப்படும் லொத்தர் | பொருத்தமான கற்கையொன்றின் அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செவன லொத்தர் சீட்டுக்களின் வருமானம் முறையே 15 சதவீதம், 04 சதவீதம், 10 சதவீதத்தினால் குறைவடைந்த போது அதன் விளம்பர செலவினம் நான்கு சதவீதம், 10 சதவீதம் மற்றும் 3 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. | சீட்டுக்களுக்காக அந்த லொத்தர் சீட்டுக்களுக்கான சந்தையினை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் காரணமாக கூடுதலான விளம்பர செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. | விளம்பர செலவினங்களை மேற்கொள்ளல். |
| (iii) | ரூபா 7,316 மில்லியன் ஆன உயர்வான வருமானத்தை ஈட்டியுள்ள கொவிசெத லொத்தர் சீட்டின் விளம்பர கிரயம் விற்பனை வருமானத்தில் 2.6 சதவீதமான குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. முறையே ரூபா 424 மில்லியன், ரூபா 731 மில்லியன், ரூபா 972 மில்லியன் மற்றும் ரூபா 1,236 மில்லியன் வருமானம் ஈட்டியுள்ள வாசனா சம்பத, சுப்பிரிவாசனா, நீரோகா மற்றும் தனநிதானய லொத்தர் சீட்டுக்களின் விளம்பரக் கிரயம் விற்பனை வருமானத்தில் முறையே 13 சதவீதம், 11 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 8 சதவீதம் ஆன உயர்வான பெறுமதியினை கொண்டிருந்தது. | கொவிசெத லொத்தர் சீட்டின் வாரத்தின் 7 நாட்களும் சீட்டிழுக்கப்படும் ஆனமையால் அதன் விற்பனை வருமானம் உயர்வான பெறுமதியினைக் கொண்டுள்ளது. சுப்பிரிவாசனா, நீரோகா, தனநிதானய ஆகியவை 2 அல்லது 3 நாட்கள் சீட்டிழுக்கப்படும் லொத்தர்கள் ஆகும். அந்த லொத்தர்களுக்கான சந்தையை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியின் காரணமாக கூடுதலான விளம்பர செலவினத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | கடந்த வருடத்தில் நாடாத்தப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 1,415 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டினுள் அந்த எண்ணிக்கை 1,423 தடவைகள் வரை 08 தடவைகளால் அதிகரித்திருந்தது. லொத்தர் விற்பனை வருமானம் கடந்த வருடத்தை விட ரூபா 1,640,617,135 இனால் அல்லது 8.03 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டினுள் ஈட்டப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,763 மில்லியனால் அதிகரித்துள்ளதுடன் அது சதவீதமாக 8.99% ஆகும். புதிய லொத்தர் சீட்டாக தனநிதானய லொத்தர் சீட்டு வாரமொன்றிற்கு மூன்று நாட்கள் படியாக சீட்டிழுக்கப்படும் வகையில் (மே 25 ஆந் திகதி முதலாவது சீட்டிழுப்பு தடவை) சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வாரம் ஒன்றிற்கு 27 சீட்டிழுப்பு தடவைகளாக காணப்பட்ட | சீட்டிழுப்புத் தடவைகளை அதிகரித்தல் முறையான கற்கையொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல். |

லொத்தர் சீட்டுக்களின் கலவையானது வாரமொன்றிற்கு 28 சீட்டுழுப்புத் தடவைகளை பேணும் வகையில் மாற்றுவதற்கு நேர்ந்துள்ளது.

பொதுவாக லொத்தர் கலவையில் சீட்டிழுப்பதற்கு உள்ள ஒன்பது லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்தாமல் இருப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதற்கு மேலதிகமாக சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் போன்ற பிரதான தேர்தல்களின் பின்னரான திகதியில் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவிலான விற்பனை வீழ்ச்சியொன்று அவதானிக்கக் கூடியதுடன் ஆகஸ்ட் 16 ஆந் திகதியில் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலின் அடுத்த தினம் மேற்படி அவதானிப்பினை அடிப்படையாகக் கொண்டு நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 4 சீட்டிழுப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இதன் காரணமாக 2018 ஆம் வருடத்திற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டினுள் 20 மேலதிக சீட்டிழுப்புக்களை நடாத்திய போதிலும், சந்தையின் நிலைமை மற்றும் நிறுவனத்தின் இலாபம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு நடாத்தப்பட்ட லொத்தர் கலவைக்கு மேலதிகமாக மேற்கொண்டு மாற்றங்களின் காரணமாக 13 சீட்டிழுப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.
ஒட்டுமொத்தமாக 2018 ஆம் ஆண்டினுள் 1,416 சீட்டிழுப்புக்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் 1,423 சீட்டிழுப்புக்கள் எனுமாறு நடாத்தப்பட்டிருந்ததுடன் அதிகரித்திருந்த சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை 07 ஆகும்.